Registered as a News paper in Ceylon

விலை சதம் 1?

# ஈழநாடு

EELA NADU

போன் 3?? National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 5 யாழ்ப்பாணம் சோபகிருது மார்கழி 18 ஆம் நாள் ஷஃபான் 16 (2 1 64) வியாழக்கிழமை இதழ் 326

வித்தியாதிபதியால்
G. C. E. பாடபுத்தகமாக
அங்கீகரிக்கப்பட்டது.
பொதுத் தேர்வுகளுக்கு
பல்லாயிரக்கணக்கோர் பயன்படுத்திய
**தமிழ் மொழி விளக்கம்**
ஆக்கியோன்:
க. கயிலாயநாதன் B.A. Dip. in Ed.
(துணை அதிபர், வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி)
திருத்திப்பெருப்பிக்கப்பட்ட புதியபதிப்பு
விலை ரூபா 3-50

யாழ்ப்பாணத்தில் பூரண ஹர்த்தால் ★ கடும்மழையிலும் மன்னாரில் ஆர்ப்பாட்டம் ★ மட்டக்களப்பிலும் சட்ட எரிப்பு ★ சிறுபான்மையினர் உரிமைபற்றி பிரதமர்

# சிங்களச்சட்டபிரதிகள் தீவைக்கப் பட்டன!

## 10,000மக்கள் கலந்துகொண்டனர்

### அரசாங்க அதிபர்களுக்கு எம்.பி.க்கள் தமிழில்கடிதம்

யாழ்ப்பாணம், வியாழன்

1956-ம் வருடத்தில் கொண்டுவரப்பட்ட சிங்களம் மட்டும் சட்டத்தின் பிரதிகள் 1964-ம் வருடப்பிறப்பான நேற்று யாழ்ப்பாணக் கச்சேரிவாசலில் வைத்து தமிழரசுக் கட்சியின் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தினால் தீவைத்துக் கொளுத்தப்பட்டது. பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்ச்சியை வடபகுதி பொலிஸ் உயர்தர அதிகாரிகளும் பார்த்தனர். மன்னார், வவனியா, திருக்கோணமலை ஆகிய இடங்களில் கடும் மழை பெய்து கொண்டிருந்தபோதிலும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் சிங்களச் சட்டப்பிரதிகள் தீவைத்து எரிக்கப்பட்ட நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் 24 மணிநேரமும் மழை பெய்த பொழுதிலும் நேற்றைய தினம் பூராவும் வானம் வெளித்திருந்தது. குறிப்பிட்டபடி பட்டிருப்பு எம். பி. திரு. இராசமாணிக்கம், மட்டக்களப்பு எம். பி. திரு. இராசதுரை, திரு. மாணிக்கவாசகர் ஆகியோர் கச்சேரி வாசலில் சிங்கள சட்டப்பிரதிகளை கொளுத்தினர். பிரமாண்டமான ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடைபெற்றது.

யாழ்ப்பாணத்தில் காலையில் பொலிஸ் கோஷ்டியொன்று 'ஜீப்'பில் முக்கிய வீதிகளில் ரோந்து சுற்றிவந்தபொழுதிலும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஆரம்பமான முற்றவெளியிலோ வேறு இடங்களிலோ காவல் புரியவில்லை. கச்சேரி வாசலில் யாழ்பபாணம் பொலிஸ் சுபரின்டென்ட், உதவி சுப்பிரின்டென்ட், பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர், மற்றும் சில பொலிஸ் கான்ஸ்டபிள்களும் நின்றனர். அசம்பாவிதமான சம்பவங்கள் எதுவுமின்றி அமைதியான முறையில் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் சட்டப் பிரதி எரிப்பும் கண்டனக் கூட்டமும் நடைபெற்றன.

யாழ்ப்பாண நகரில் கறுப்புக்கொடிகள் அதிகம் காணப்படவில்லையாயினும் கடைகள் அடைக்கப்பட்டு பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

திருக்கோணமலை, மன்னார், வவனியா ஆகிய இடங்களில் கடும் மழை பெய்துகொண்டிருந்தபோதிலும் அந்தந்தத் தொகுதி எம். பி.க்களின் தலைமையில் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடைபெற்று கச்சேரி வாசல்களில் சிங்களம்மட்டும் சட்டப் பிரதிகள் தீவைத்துக் கொளுத்தப்பட்டன.

தமிழ்பேசும் பகுதிகளான வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் சிங்களத்தில் நிர்வாக அலுவல்களைச் செய்ய வேண்டுமென்ற அரசாங்கத்தின் தீர்மானத்துக்கிணங்க சிங்கள மொழியில் நேற்று முதல் நிர்வாகம் நடைபெறவிருப்பதை ஆட்சேபித்து தமிழரசுக் கட்சியினர் அமைதியான முறையில் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களையும் கண்டனக் கூட்டங்களையும் நடத்தினர். சிங்களம் மட்டும் சட்டத்தின் பிரதிகளும் தீ வைத்து எரிக்கப்பட்டன.

(2 ம்பக்கம் பார்க்க)

## 'எமது போராட்டத்தின் முதற்படி சட்ட எரிப்பே'

### மன்னார் எம். பி. அறிவிப்பு

எருக்கலம்பிட்டி, புதன்

தமிழரசுக்கட்சி திட்டமிட்டிருந்தபடி இங்கு இன்றைய தினம் சிங்களச் சட்ட எதிர்ப்பு ஊர்வலம் நடைபெற்றதுடன், சிங்களச் சட்டப்பிரதியும் கச்சேரி வாசலில் வைத்து எரிக்கப்பட்டது. மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் மன்னார் எம். பி. திரு வி. ஏ. அழகக்கோன் தமிழ் மொழியில் எழுதிய கடிதம் ஒன்றையும் சமர்ப்பித்தார். ஆர்ப்பாட்ட ஊர்வலம் அமைதியாக நடைபெற்றது. பெரும் மழையையும்

(5-ம் பக்கம் பர்க்க)

## "பெரும்பான்மையினர் உரிமையை அமுல் செய்வது கடமை"

### சிங்கள ஆட்சி மொழிபற்றி பிரதமர் செய்தி

கொழும்பு, புதன்

"காலஞ்சென்ற எனது கணவர் நாட்டின் பெரும்பான்மை மக்களுக்கு அளித்த வாக்குறுதி இப் புதுவருடத்தில் செயல் மூலம் அமுலாக்கப்பட்டிருக்கிறது. பெரும்பான்மையினரின் விருப்பம், ஆர்வம், ஜனநாயக கடமை ஆகியவற்றை உத்தேசித்து நாட்டு நிர்வாகம் சிங்களமொழியில் இன்று முதல் ஆரம்பமாகிறது" என பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா நாட்டு மக்களுக்கு விடுத்துள்ள புது வருடச் செய்தியில் கூறியிருக்கிறார்.

கடந்த 400 வருட அந்நிய ஆட்சியின் காரணமாக நாட்டின் சமயம், மொழி ஆகியன பாதிக்கப்பட்டிருப்பதாயும், இப்போது பெரும்பான்மையினர் விருப்பத்திற்கேற்பவும், நியாயத்தின் பெயராலும் நிர்வாகத்தில் பெரும்பான்மையினரின் உரிமை அமுல் நடத்தப்படுவதாயும் பிரதர் தெரிவித்தார். அதே சமயம் சிறுபான்மையினரின் நியாயமான உரிமையைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் கடமை என்றும் பிரதமர் கூறினர்.

"சிறுபான்மையினருக்கு இதனால் கஷ்டங்கள் ஏற்படலாம். ஆனால் எல்லோரும் இலங்கையர். அனைவரும் ஒரே குடும்பமெனக் கருதி ஒத்துழைக்குமாறு வேண்டிக் கொள்ளுகிறேன். எவர் மீதும் முரட்டுத்தனமாக அதிகாரம் செலுத்துவது அரசாங்கத்தின் கருத்தல்ல. பெரும்பான்மையினரின் உரிமை பாதிக்கப்படாமல் சிறுபான்மையினரின் உரிமையைப்பாதுகாப்பதே அரசாங்கத்தின் கொள்கை. பாதிக்கப்பட்டவர்களின் நியாயமானமுறைப்பாட்டைக்கேட்டு, நீதி வழங்க அர

(5-ம் பக்கம் பார்க்க)

## "சிங்களத்தை திணித்தால் பாடசாலைகள் போர்க்களமாகும்"

### சிங்கள எதிர்ப்பு கூட்டத்தில் உடுப்பிட்டி எம். பி. முழக்கம்

யாழ்ப்பாணம், வியாழன்

"வட, கீழ் மாகாணங்களிலுள்ள பாடசாலைகளில் நமது பிள்ளைகளின் தொண்டைக்குள் சிங்களத்தை விருப்பத்திற்கு மாருக திணிக்க அரசாங்கத்தினர் சிங்கள ஆசிரியர்களை அனுப்ப முயற்சித்தார்களேயானல் கலைக்கழகமாக இருக்கும் பாடசாலைகள் போர்க்களமாக மாறும் என்று அரசாங்கத்திற்கு பகிரங்கமாக எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன்."

யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் தமிழரசுக்கட்சியின் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் நேற்றுக்காலை நடைபெற்ற சிங்களச்சட்ட எதிர்ப்புக்கூட்டத்தில் பேசும்போது உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் மேற்கண்டவாறு கூறினர்.

பெண்கள் உட்பட பல்லாயி

(5-ம் பக்கம் பார்க்க)

புகையிலை - மிளகாய் - கத்தரி - முந்திரிகை முதலிய பயிர்களில் உண்டாகும்
சுறுணைகளையும் புழுக்களையும் அழிப்பதற்கு
BAYER
**மெற்றசிஸ்ரொக்ஸ்**
METASYSTOX
நாற்று மேடையில் இருந்து பாவிக்கத் தொடங்கவும்
T'GRAMS ROYAEL ROYAL DISPENSARY PHONE 397 JAFFNA

## மணிவாக்கு

வாழ்க்கை என்பது மிக உற்சாகமளிக்கும் ஒருவிஷயமாகக் காண்கின்றேன். மற்றவர்களுக்காக வாழும்போதே உற்சாகம் மிக உச்சத்திலிருக்கின்றது.

— ஹெலன்கெல்லர்


# ஈழநாடு

EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சோபகிருது ஆண்டு
மார்கழி மீ 18 உ (2 1 64)


## தமிழர் துக்கம்

ஈழநாட்டில் வசிக்கும் சுமார் 30 லட்சம் தமிழ்பேசும் மக்களுக்கு நேற்று பெரிய துக்க தினமாகும். அவர்களது உயிர் போன்ற தமிழ்மொழிக்கு அவர்கள் வசிக்கும் இடத்திலேயே உரிமை பறிக்கப்பட்டு சிங்களம்மட்டும் அரசாங்க மொழியாக்கப்பட்டுள்ளது. இதனல் அவர்களனைவரும் இந்நாட்டில் இரண்டாந்தர, மூன்றாந்தர பிரஜைகளாக்கப்பட்டுவிட்டார்கள். இங்கு தமிழ்பேசும் மக்களிடையே சாதி, சமயம், கட்சி முதலிய என்ன வேற்றுமைகளிருப்பினும், அவர்கள் அனைவரின உள்ளமும் இப்பொழுது பெரும் வேதனையும் துக்கமும் அடைந்துள்ளதென்பதில் ஐயமில்லை.

ஜனநாயகத்தின் பெயரால் தங்களுக்கு இழைக்கப்பட்டுள்ள இந்தப் பெரிய அநீதியை எதிர்த்து, துக்கம் தெரிவிக்கவும் இந்த அநீதியை நீக்கவும் வேண்டிய பொறுப்பும் கடமையும் இந்நாட்டில் வசிக்கும் ஒவ்வொரு தமிழருக்கும் உண்டு. இந்த எதிர்ப்பையும் துக்கத்தையும் நேற்று யாழ்ப்பாணம், மன்னர், வவனியா, திருகோணமலை, மட்டக்களப்பு இந்தஐந்து தமிழ்பேசும் பகுதிகளிலும் மக்கள் ஏகோபித்து அமைதியாகவும் சன்யமாகவும் தெரிவித்துள்ளனர். உணர்ச்சி மிகுந்துள்ள இச்சமயத்திலும் அவர்கள அஹிம்ஸா நெறி தவறவில்லை. கட்டுப்பாட்டுடன் எல்லாக் கடைகளையும் மூடியும் நீண்ட ஊர்வலமாகச் சென்றும் தங்கள் உணர்ச்சியை மேலான முறையில் தெரிவித்திருக்கின்றனர்கள்.

இனி என்ன? 2-ந் திகதி வியாழக்கிழமையும் சிங்கள எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெறுமா என்றுநமது பிரதிநிதி கேட்டதற்கு, தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் 11-ந் திகதி அரசாங்கம் நடந்து கொள்ளும் விதத்தைப பார்த்துத்தான் 2-ந் திகதி திட்டம் வெளியிடப்படுமென்றும் இது தொடர்ந்து நடப்பது அரசாங்கம நடந்து கொள்ளும் விதத்தையே பொறுத்துள்ளதென்றும் கூறியுள்ளார். நேற்று அரசாங்கமும் தமிழரின் இந்த ஆர்ப்பாட்டத்தை எவ்விதத்திலும் தடுக்கவில்லை. தடை ஏதாவது செய்திருப்பின் நிலைமை மிக மோசமாகி இருக்கக் கூடும். இந்தமட்டில் புத்தியாக அரசாங்கம் நடந்து கொண்டது நல்லதே.

ஆனல் பிரச்னை இத்துடன் [illegible] மான அந்தஸ்து சட்டபூர்வமாகக் கிடைக்கும் போதுதான் இப்பிரச்னை தீர முடியும். தமிழரின் ஏகோபித்த உணர்ச்சியையும் நாட்டின் மேலான நன்மையையும் கருதி இந்த அரசாங்கம், மனம்மாறி மொழிச்சட்டத்தைத் திருத்த முன்வருமா? பொதுத்தேர்தல் நெருங்கிவருவதால், அதற்கிடையே அரசாங்கம் தமிழரின் கோரிக்கையில் நியாயமிருப்பதை உணர்ந்தாலும் தேர்தலுக்கிடையே சட்டத்தைத் திருத்த முன்வருமென்று எதிர்பார்ப்பது துர்பலமே. ஆனல் இந்நாட்டுப் பிரஜைகளான தமிழ்மக்கள், தங்கள் மொழியிலே தொடர்ந்து அரசாங்கத்துடன் தொடர்பு கொள்வதற்கு எவ்விதத்தும் தடை ஏற்படுமாயின் நிலைமை மோசமாகி, எதுவும் ஏற்படலாமாதலால் அரசாங்கம் இதை உணர்ந்து மிக எச்சரிக்கையாகக் காரியம் செய்ய வேண்டும்.

இனி தமிழ்த் தலைவர்களின் பொறுப்பு மிக அதிகம். இதுவரை அவர்களிடையே என்ன வேற்றுமைகள் இருந்திருப்பினும் சரி, இப்போது தமிழ்பேசும் மக்கள் அனைவரும் இங்கு இரண்டாம் பட்சப் பிரஜைகளாகி பெரும் துக்கத்தில் ஆழ்ந்துள்ளதால் தலைவர்கள் தங்கள் பழைய வேற்றுமைகளை எல்லாம் ஒரு பக்கம் மூட்டைகட்டி வைத்து விட்டு, வீண் கௌரவங்களைப் பாராமல் ஒன்றுகூடி, தமிழ் பேசும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இந்தப் பெரிய அநீதியை நீக்க தக்க நடவடிக்கைகளை எடுக்க முன்வர வேண்டும். தமிழ்த்தலைவர்கள் ஒன்றுபட்டால் இங்கு தமிழ்ச்சமூகத்தின் ஒற்றுமையும் பலமும் அதிகரித்து, அவர்களது நியாயமான உரிமைகள் கிடைக்கவும் அவர்களது துக்கம் தீர [illegible] நியாயவும் சீக்கிரம் வழிபிறக்கும்.

# சிங்கள சட்ட பிரதிகள் . . .

(1ம்பக்கத் தொடர்ச்சி)

### யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம்

நேற்றுக் காலை ஏழு மணியிலிருந்தே யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் தமிழரசுக் கட்சித் தலைவர்களும் தொண்டர்களும் பொதுமக்களும் திரளத் தொடங்கினர். காலை 8 மணிக்கு ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஆரம்பமாகுமென அறிவிக்கப்பட்டிருந்த பொழுதிலும் ஒன்பது மணியளவில் தான் ஊர்வலம் ஆரம்பமானது.

ஆண்களும் பெண்களுமாகப் பெருந் தொகையானேர் கலந்து கொண்ட இந்த ஊர்வலம் அமைதியான முறையில் சுலோக அட்டைகளைத் தாங்கிக்கொண்டும் சுலோகங்களைக் கோஷித்துக் கொண்டும் நகரின் பிரதான வீதி வழியாக கச்சேரிக்குச் சென்றது. ஊர்வலத்தில் கறுப்புக் கொடிகளும் தமிழரசுக் கட்சியின் மூவர்ணக் கொடிகளும் காணப்பட்டன.

சிங்களத்தைத் திணிக்கும் உத்தியோகத்தர்களே! வெளியேறுங்கள். கண்டி ராஜ்யம் தமிழ் நாட்டை ஆள முடியாது; தமிழ் நாட்டில் சிங்களத்தைத் திணிப்போரை பகிஷ்கரிப்போம்; சிங்களத்தைக் கற்று செந்தமிழை விற்க மாட்டோம்; சிறிமாவோ அரசாங்கமே! தமிழரை அழிக்கச் சதி செய்யாதே; சிறிமாவோ, அரசாங்கமே! தமிழரை அழிக்கச் சிங்கள அரசாங்க ஊழியரை உபயோகிக்காதே" எச்சரிக்கை! எங்கள் பாடசாலைகளில் கைவைத்தால் அனர்த்தம் விளையும்." செந்தமிழ் நாட்டில் சிங்களத் திணிப்பை செங்குருதி சிந்தியும் நிறுத்துவோம்" சங்கிலியன் சீமையில் சிங்கள ஆட்சியா? தமிழா பொங்கி எழு! என்பன போன்ற சுலோகங்கள் எழுதப்பட்ட அட்டைகளை ஊர்வலத்தில் சுமந்து சென்றனர்.

### நால்வர் தலைமையில்

தமிழரசுக் கட்சியின் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், வட்டுக்கோட்டை, எம், பி. திரு. ஏ. அமிர்தலிங்கம், தீவுப்பகுதி எம். பி. திரு. வ. நவரத்தினம் ஆகியோரின் தலைமையில் ஊர்வலம் சென்றது. பெண்கள் ஊர்வலத்துக்கு திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கமும் ஊர்காவற்றுறை எம். பி.யின் மனைவியார் திருமதி நவரத்தினமும் தலைமை தாங்கினர். ஊர்வலம் ஆரம்பமானபோது தொண்டர்கள் குறைவாக இருந்தனரெனினும் கச்சேரி வாசலை அடையும் போது ஊர்வலத்தில் ஐயாயிரத்துக்கு அதிகமானவர்கள் கலந்து கொண்டிருக்கக் காணப்பட்டனர். ஊர்வலத்தில் கலந்து கொள்ளாமல் மற்றும் ஐயாயிரத்துக்கு அதிகமான மக்கள் கச்சேரி முன் திரண்டிருந்தனர்.

### அரசாங்க அதிபரிடம் கடிதம்

கச்சேரி வாசலை ஊர்வலம் வந்தடைந்ததும் திருவாளர்கள் செல்வநாயகம், சிவசிதம்பரம், அமிர்தலிங்கம், நவரத்தினம் ஆகிய நால்வரும் கச்சேரிக்குள் அரசாங்க அதிபரின் காரியாலயத்துக்குச் சென்று அரசாங்க அதிபரிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தனர். தமிழில் எழுதப்பட்டு நான்கு எம். பி.க்களும் தமிழில் கையொப்பமிட்டிருந்த அந்தக் கடிதத்தை தமிழ்பேசும் மக்களின் சார்பில் தாம் கொடுப்பதாக திரு. செல்வநாயகம் தமிழில் கூறிக் கையளித்தார். அரசாங்க அதிபரிடம் நான்கு எம். பி.க்களும் தமிழில் கூறியவற்றை நேற்று உதவி அரசாங்க அதிபராகப் பதவியேற்ற திரு எம். பெருமையினர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து அரசாங்க அதிபரிடம் கூறினர்.

திரு. செல்வநாயகத்துடனும் இதர மூன்று எம். பி.க்களுடனும் சிறிது நேரம் பேச விரும்புவதாக அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜயவீரா தெரிவித்தார். இப்பொழுது சந்தித்துப் பேசுவதற்கு நேரமில்லையென்றும் வேறு பல வேலைகள் இருப்பதால் வேறொரு சமயம் சந்தித்துப் பேசலாமென்றும் திருசெல்வநாயகம் பதிலளித்தார்.

### அதிபருக்குக் கொடுத்த கடிதம்

அரசாங்க அதிபரிடம் கொடுத்த கடித விபரம் வருமாறு:—

25, 2-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்,
1-1-64

அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாணம்.

ஐயா,

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களும் இந்நாட்டு மன்னராகிய மக்களின் ஒரு பகுதி. ஆகவே அவர்கள் தமது மொழியாகிய தமிழில் ஆளப்பட உரிமையுடையவர்களாவர். அதைமறுப்பது அவர்களுடைய ஆதிபத்திய உரிமைக்குப் பங்கம் விளைவிக்கும். இதை உணர்ந்து முன்னையப் பிரதமர் திரு. பண்டாரநாயக்கா, தமிழ இலங்கையின் தேசிய சிறுபான்மையோரின் மொழியாக சட்டபூர்வமாக ஒப்புக்கொண்டும், வடக்கு – கிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழியாகத் தமிழே இருக்குமென ஏற்றுக் கொண்டும் எங்களோடு ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார்

மேலும் தமிழ்ப் பேசும் மக்களைச் சிங்களத்தில் ஆட்சி செய்ய எத்தனித்தால் எமது அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை தத்துவத்துக்கு முரணானது.

இன்று முதல் இம்மாவட்ட நிர்வாகத்தை சிங்களத்தில் நடாத்தத் திட்டமிட்டிருக்கிறீர்கள். இச்செயல் எமது மக்களுக்கு இழைக்கப்படும் மாபாதகமாகும். அரசாங்கத்தினல் கட்டளை இடப்பட்டிருக்கிறீர்கள் என்ற காரணம் இவ் அரசியல் அக்ரமத்தைப் புரிவதற்கு மன்னிப்பாகமாட்டாது. ஆகையால் இம்மாவட்டத்தைச் சிங்களத்தில் நிர்வகிக்கும் முயற்சியை நிறுத்தும்படி தமிழ்ப் பேசும் மக்கள் சார்பில் கோருகிறோம். மேலும் சிங்களத்தை எம்மீது திணிப்பதற்காக யாழ்ப்பாணத்திற்குக் கொண்டுவரப்பட்ட உத்தியோகத்தர் அனைவரையும் திருப்பி அனுப்பும்படி கோருகிறோம்.

தங்கள் உண்மையுள்ள,
சா. ஜே. வே. செல்வநாயகம்.
வ. நவரத்தினம்,
மு. சிவசிதம்பரம்,
அ. அமிர்தலிங்கம்

### சிங்கள சட்டப் பிரதி தீக்கிரை

இதன்பின் நால்வரும் கச்சேரி வாசலுக்குத் திரும்பிவந்தனர். 1956 ம் ஆண்டு ஜூன் மாதம் 5 ந் திகதி காலிபேஸ் மைதானத்தில் தமிழரசுக் கட்சியினர் சத்தியாக்கிரகம் செய்கையில் காடையர்களால் தாக்கப்பட்ட சமயம் பார்லிமெண்டில் சிங்களம்மட்டும் மசோதா கொண்டுவரப்பட்டது. 1956 ம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட சிங்களம்மட்டும் சட்டத்தின் பிரதியொன்று 1964 ம் ஆண்டு உதயமான நேற்று கச்சேரி வாசலில் உயர்தர பொலிஸ அதிகாரிகள் முன்னிலையில் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கரகோஷம் செய்ய தீவைத்து எரித்து தமிழ்ப்பகுதிகளில் சிங்களத்தை திணிப்பதற்கு ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது.

சிங்களம்மட்டும் சட்டப் பிரதி தீயிட்டுக் கொளுத்தப்படுவதைப் பார்ப்பதற்கும் எதிர்ப்பு இயக்கத்தில் கலந்துகொள்வதற்குமாக வெளியூர்களிலிருந்தும் பலர் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தனர்.

### பூரண ஹர்த்தால்

தமிழ் பேசும் பகுதிகளில், தமிழ் பேசும் மக்கள்மீது சிங்களத்தைத் திணிக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு ஆட்சேபம் தெரிவிக்குமுகமாக 1964 ம் ஆண்டு ஜனவரி முதல் திகதியை துக்கதினமாக அனுஷ்டிக்க வேண்டுமென்றும் கடையடைப்புச் செய்யவேண்டுமென்றும் தமிழரசுக் கட்சியினர் வேண்டுகோள் விடுத்திருந்தனர். நேற்று யாழ்ப்பாணத்தில் ஒரு சில கடைகள் மட்டும் ஒற்றைக் கதவு திறந்து வைத்திருந்தன. இதர கடைகளும் வர்த்தக ஸ்தாபனங்களும் பூரணமாகக் கடையடைப்புச் செய்திருந்தன. கறுப்புக் கொடிகள் சில இடங்களில் காணப்பட்டன.

# லண்டன் செல்வார்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் நிர்வாகக் காரியதரிசி திரு. எஸ். பத்மநாதன் வியாபார நிர்வாகம், கணக்கியல் முதலிய துறைகளில் தேர்ச்சி பெறும் பொருட்டு லண்டன் செல்லவிருக்கிறர். லண்டனில் தங்கியிருக்கும் காலத்தில் அங்குள்ள வியாபார ஸ்தலஸ்தாபனங்களுக்குச் சென்று நிர்வாக முறைகளைப் பார்வையிடுவார்

# ஐயாறன் எழுதுவது

நேற்றுப் பிறந்த புதுவருட தினத்தில் இங்கு என்ன நடக்கப் போகின்றதோ என்று எனக்கும் பெரிய கவலைதான். இறைவனைப்பிரார்த்தித்து விட்டு, ஊர் நிலைமை எப்படி இருக்கிறதென்றுபார்க்க காலையில் வெளிக்கிட்டேன்.

கடைகளெல்லாம் மூடியிருந்தார்கள். ஒரு சில கடைகள்மட்டும் ஒற்றைக்கதவு திறந்திருந்தது. ஆனல் அந்தக் கடைகளுக்கும் யாரும் செல்லவில்லை. முற்ற வெளியிலிருந்து பெரிய ஊர்வலம் புறப்பட்டுதெருவின் ஒரு பக்கம் அமைதியாகச் சென்றுகொண்டிருந்தது. முன்னே தலைவர்கள், பின்னர் தாய்மார்கள், பிறகு ஆண்கள், கடைசியாக பல சைக்கிள் காரர்கள். இப்படி அணிவகுத்துச்சென்ற இந்த நீண்ட ஊர்வலம், தமிழரின் துக்கத்தையும், எதிர்ப்பையும் காட்டுவதாக இருந்தது. தெருவின் இருபக்கங்களிலும் பலர் கூட்டமாக நின்றனர்.

கச்சேரியடியில் காலையிலிருந்தே கூட்டம் கூடி சத்தியாக்கிரக காலத்தைநினைவூட்டியது. ஆனல் பொலிஸ், இராணுவப் படைகளைக் காணவில்லை. வாசலில் சில பொலிஸ் அதிகாரிகள் காணப்பட்டனர். ஒரு ஜீப்பில் நாலைந்து இராணுவத்தினர் அங்குமிங்கும் ஓடிவந்தனர்.

ஊர்வலத்தினர் அமைதியாகவும் ஒழுங்காகவும், சில கோஷங்களை எழுப்பிக் கொண்டு வந்தனர். எவ்வளவோ ஆத்திரமூட்டப்பட்டுள்ள இந்த நிலைமையிலும் தமிழர் இவ்வளவு கட்டுப்பாடாகவும் அமைதியாகவும் நடந்தது அவர்களது மேலான பண்பைக் காட்டுவதாக இருந்தது. இதே சமயம் தங்களது நியாயமான உரிமையை எப்படியும் பெற்றே தீருவோமென்ற அவர்களது உறுதியையும் காட்டுவதாக இருந்தது.

நேற்று பலரும் அஞ்சியபடி எதுவும் நடந்துவிடவில்லை. தெய்வம் காத்தது. இனியும் அதேதெய்வம் நம்மைக்காத்து துணைநிற்குமென்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை. திக்கற்றவருக்கு தெய்வம்தானே துணை.

"காக்கக் கடவிய நீ
காவாதிருந்தக்கால்
யார்க்குப் பரமாம்
அறுமுகவா!"

* * *

அராலி கிராமத்தைச்சேர்ந்த ஒரன்பர் வந்து, புதுவருட தினத்தன்று அங்குவரவேண்டுமென்று அன்புடன் அழைத்தார். என்ன விசேஷம் தெரியுமா? அங்கு குழாய்த்தண்ணீர் திறப்புவிழா நேற்று நடைபெற்று அவ்வூரின் பெ யகுறை தீர்ந்தது.

அங்கு வயலிலுள்ள ஒரே ஒரு கிணற்றில்தான் நல்லகுடி தண்ணீர் உண்டு. அங்கு சென்று தண்ணீர் கொண்டுவருவது மிகவும் கஷ்டம். பெரிய மனிதர் சிலர் ஏழுவருடமாக பகீரதப் பிரயத்தனம்செய்து, குழாய்த்தண்ணீர் திட்டதை ஏற்படுத்தியுள்ளது பெரிதும் பாராட்டத்தக்கது.

சிலமாதங்களுக்குமுன் முருகமூர்த்தி ஆலயத்தை ஹரிஜனங்களுக்கு அவ்வூர் மக்கள் திறந்து விட்டார்களல்லவா? அதைத் தொடர்ந்து குடிதண்ணீர் பிரச்னையும் இப்போது தீர்ந்துள்ளது. இதற்காக அராலிமக்களுக்கு எனது இரட்டிப்புப் பாராட்டுகள். மற்ற கிராமங்களுக்கும் அராலிமேலானதோர் முன்மாதிரியாகும்.

* * *

நாளை திருவையாற்றிலே ஸ்ரீ தியாகராஜ இசைவிழா ஆரம்பமாகிறது. ஆகாசவாணியின் உதவியால் ஈழத்து அன்பர்களும் அதை சற்றே கேட்டு இன்புறலாம்.

இருஇசைப் பெரியார்களான ஸ்ரீ மகாராஜபுரம் விஸ்வநாத அய்யர், கும்பகோணம் ராஜ

(5-ம் பக்கம் பார்க்க)

# "காஷ்மீரசம்பவத்துக்கு இந்தியாவே காரணம்"

## பாகிஸ்தான் பத்திரிகைகள் போர்க்கோலம்

கராச்சி, ஜன. 1

**காஷ்மீரில் இந்து—முஸ்லிம் பிளவை இந்தியா தோற்றுவிக்கிறது என பாகிஸ்தான் பத்திரிகைகள் குற்றம் சாட்டியுள்ளன.**

"காஷ்மீரில் முகம்மதநபியின் புனிதகேசம் காணமற்போயிருப்பதும், ஒரு முஸ்லிம் பள்ளிவாசல் எரிக்கப்பட்டிருப்பதும் காஷ்மீர் முழுவதையும் கபளீகரம் செய்வதற்கு இந்தியா மேற்கொண்டுள்ள திட்டம்" என "டான்" பத்திரிகை தனது ஆசிரியத் தலையங்கத்தில் கூறியுள்ளது.

"இந்த விஷயத்தில் நேருவுக்கு அமெரிக்கா உதவிசெய்திருக்கிறது, இந்தியா இதற்குத் தூண்டப்பட்டும் இருக்கிறது" என டான் கூறியது.

"ஐரோப்பிய ஏகாதிபத்தியத்துக்குப் பதிலாக உதவி, தொழில்நுட்பம், ஆலோசனையாளர்கள், உளவாளிகள் என்ற பெயரால் மற்றொரு ஏகாதிபத்தியம் ஆசியாவில் உருவாகி வருகிறது.

ஆசியாவில் இவ்விதத் துரோகத்துக்கு நேரு ஆதிக்கம் செலுத்தி வருகிறார். காஷ்மீரில் அவரது புதிய எஜமானர்கள் அவருக்கு ஊக்கமளித்து வருகிறார்கள் என்றும் "டான்" பத்திரிகை கூறுகிறது.

ஸ்ரீநகர் ஆர்ப்பாட்டங்களுக்கு பாகிஸ்தான் பத்திரிகைகளில் மிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தன. பெரும்பாலான பத்திரிகைகள் எழுதியுள்ள ஆசிரியத் தலையங்கங்களில் காஷ்மீரில் வகுப்புக் கலவரத்தை உண்டாக்குவது மூலம் முழுகாஷ்மீரையும் இந்தியாவுடன் இணைக்க புதுடில்லி சதி செய்து வருவதாயும் கூறப்பட்டுள்ளது.

"அன்ஜம" என்ற உருதுப் பத்திரிகை, பாகிஸ்தான் ஆதிக்க காஷ்மீர் தலைவர்கள் ஜனாதிபதி அயூபுக்கு அனுப்பிய தந்தியில் பாகிஸ்தான் ராணுவம் காஷ்மீருக்குள் பிரவேசிக்க உத்தரவிடும்படி கேட்கப்பட்டிருப்பதாகக் கூறியுள்ளது.

"பாகிஸ்தான் அரசாங்கமும் இதர முஸ்லிம் நாடுகளும் இந்தியர்களுக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டும் என்றும் அன்ஜம் பத்திரிகை கோரியியிருக்கிறது.

"ஹூரியத" என்ற பத்திரிகை "காஷ்மீர் சம்பவம் இஸ்லாமிய உலகுக்கே ஒரு சவால் எனக் கூறியிருக்கிறது. நேருவை ஹிட்லர் மீசையுடன் ஒரு கேலிச்சித்திரத்தையும் அது தீட்டியுள்ளது. காஷ்மீரில் காட்டுமிராண்டித்தனமாக அவர்கள் பிரவேசிப்பதாயும் அந்தக் கேலிச்சித்திரத்தில் காட்டப்பட்டிருக்கிறது. இதற்கிடையில் ஒரு மாஜிஸ்டிரேட்டையும் சப்இன்ஸ்பெக்டரையும் உயிருடன் எரிக்க முயன்ற ஒரு கூட்டத்தின்மீது தற்பாதுகாப்புக்காக துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது எனகாஷ்மீர் அரசாங்கம் அறிவித்துள்ளது.

# காஷ்மீர் மக்களுக்கு நேரு அனுதாபம்

## வகுப்புவாதம் தலைகாட்டாதிருப்பது குறித்து மகிழ்ச்சி

புதுடில்லி, ஜன. 1

புனிதச்சின்னத்தின் மறைவால் துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் ஜம்மு, காஷ்மீர் மக்களுடன் நாட்டின் சகலமக்களும் கலந்து கொள்கிறார்கள் என பிரதமர் நேரு நேற்றிரவுநிகழ்த்திய வானொலிப் பேச்சின் போது குறிப்பிட்டார்.

குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க சகல முயற்சிகளும் பூரணமாக எடுத்துக் கொள்ளப்படும் என்றும் அவர் உறுதியளித்தார். புனிதச்சின்னத்தை மீட்க முழுமையான நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

இந்த நெருக்கடியான நிலையில் வகுப்புவாதம் தலைகாட்டாதிருப்பது குறித்து மகிழ்ச்சியடைவதாயும் மத்திய உளவறியும் அதிகாரிகள் ஸ்ரீநகருக்கு அனுப்பப்பட்டிருப்பதாயும் பிரதமா நேரு தெரிவித்தார்.

காஷ்மீர் பிரதமர் திரு. ஷம்சுதீன் பேசுகையில் கூறியதாவது:

"எங்கள் துக்கத்துக்கு நாடு முழுவதிலுமிருந்து ஏராளமான அனுதாபங்களும் உதவி உத்தரவாதங்களும் கிடைத்துள்ளன. காஷ்மீரில் அமைதியைக் குலைக்கவும் நெருக்கடியை உண்டாக்கவும் விஷமிகள் முயன்றிருக்கிறார்கள். பொய் வதந்திகளை அவர்கள் பரப்பி வந்தார்கள்" என்றும் அவர் கூறினார்.

## மூழ்கிய கப்பல்

சிங்கப்பூர், ஜன. 1

கடந்த 23-ந் திகதி இந்தோனேஷியா கரைக்குள் மூழ்கிய மொகம்மதி என்ற இந்தியக் கப்பல் பழுதுபார்ப்பதற்காக சிங்கப்பூருக்கு இழுத்துச் செல்லப்படும்.

## ஜனாதிபதி வாழ்த்து

புதுடில்லி, ஜன. 1

ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் சூடான், கியூபா ஆகியநாடுகளின் தேசியதினத்தை முன்னிட்டு வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருக்கிறார்.

## மைனாரிட்டிகள்கூட்டம்

டாக்கா, ஜன. 1

கிழக்கு பாகிஸ்தானில்மைனாரிட்டிகள் மிகவும் கஷ்டநிலையில் இருப்பதாயும் அவர்களது வீடுகள் பலவந்தமாக ஆக்கிரமிக்கப்படுவதாயும் கூறப்படுகிறது.

## கானாவில் வாக்கெடுப்பு

ஆக்ரா, ஜன. 1

கானா அரசியலமைப்பைத் திருத்துவது சம்பந்தமாக இம் மாதக் கடைசியில் மக்களிடையே வாக்கெடுப்பு நடைபெறும் என ஜனாதிபதி நிக்ருமா அறிவித்துள்ளார்.

## யு. எஸ். துருப்புக்கள் அகற்றப்படும்

வாஷிங்டன், ஜன. 1

ஜப்பானிலுள்ள 3000 அமெரிக்கத் துருப்புக்கள் விரைவில் அகற்றப்படும் என இங்கு அறிவிக்கப்பட்டது.

## கைகலப்பு

பம்பாய், ஜன. 1

பம்பாயில் ரெயில்வே பொலிசாருக்கும் மின்சார ஊழியர்களுக்குமிடையே நடைபெற்ற கைகலப்பொன்றில் 8 பேர் காயமடைந்தனர்.

## உயர் அதிகார கமிட்டி

புதுடில்லி, ஜன. 1

சர்க்கரைத் தொழில் பற்றி ஆராயுமுகமாக உயர் அதிகாரக் கமிட்டி ஒன்றை மகாராஷ்டிர அரசாங்கம் நியமித்துள்ளது.

## ஐ. நா-வுக்கு மலேஷியா புகார்

கோலாலம்பூர், ஜன. 1

இந்தோனேஷியா பற்றி மலேஷியா ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்டுக்குப் புகார் கூறியிருக்கிறது. மலேஷியா மீது அது ஆக்கிரமிப்புக்கொள்கையை அனுஷ்டித்து வருவதாய்க் கூறியுள்ளது. சமீபத்தில் ஸாபாவில் இந்தோனேஷியர்கள் தாக்கியதாய் 8 மலேஷிய வீரர் கொல்லப்பட்டனர் என்றும் 19 பேர் காயமடைந்தனர் என்றும் இதைத் தொடர்ந்தே மலேஷியா புகார் செய்துள்ளதென்றும் அறிவிக்கப்படுகிறது. இந்தோனேஷியத் துருப்புக்கள் தாக்குதலில் ஈடுபட்டார்கள் என்ற புகாரை இந்தோனேஷியா மறுத்திருக்கிறது.

## கிரீஸில் பொதுத்தேர்தல்

ஏதன்ஸ், ஜன. 1

வருகிற பெப்ரவரி மாதம் கிரீஸில் பொதுத்தேர்தல் நடைபெறுமென அறிவிக்கப்படுகிறது.

## தனிப்பட்ட வருமானத்துக்கு வரம்பு

### காங்கிரஸ் தீர்மானம்

புதுடில்லி, ஜன. 1

தனிப்பட்ட சொத்துக்களுக்கும், வருமானத்திற்கும் குறைந்த அளவு வரம்பு கட்டவேண்டுமென புதுடில்லியில் கூடியுள்ள காங்கிரஸ் காரியக் கமிட்டி தயாரித்துள்ள நகல் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

## 6 ராக்கெட்டுகளை இந்தியா அனுப்பும்

புதுடில்லி, ஜன. 1

அடுத்த 2 மாதங்களில் திருவனந்தபுரத்திலுள்ள தும்பா ராக்கெட் தளத்திலிருந்து 6 ராக்கெட்டுகள் வானவெளிக்கு அனுப்பப்படும் என அறிவிக்கப்படுகிறது.

## துங்கு ரஹ்மான்

கோலாலம்பூர், ஜன. 1

இந்தோனேஷியா, மலாயா மீது பெருமளவில் ஆக்கிரமிப்பு நடத்த ஆரம்பித்தால் ஐ. நா. உதவியைத் தாம் அழைக்கப்போவதாக பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் கூறினார்.

## பாகிஸ்தானியர் உட்புக முயற்சி

புதுடில்லி, ஜன. 1

திரிபுரா எல்லையில் ஆயுதம் தரித்த பாகிஸ்தானியர் கூட்டம் ஒன்று இந்திய எல்லைக்குள் புக முயன்றதாயும் இந்திய எல்லைப்படையினர் அவர்களை விரட்டியடித்துவிட்டனர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

# ஐரோப்பாவிலேயே அதிக சம்பளம் பெறும் ராஜதந்திரி

## வருஷம் 3 லட்சம் டாலர்

பான், ஜன. 1

ஐரோப்பாவிலேயே மிக அதிகமாகச் சம்பளம் பெறும் அதிகாரியின் பெயர் பெர்தோல்டு பெயிட்ஸ், மேற்கு ஜேர்மனியின் 'கிழக்கு' அரசியல் மிகவும் முக்கியமான புள்ளி இவர் சமீபத்தில் தன் 50-வது பிறந்த தினத்தைக் கொண்டாடினார்.

அவர் ராஜதந்திரிகள், ஸ்தானிகர்கள் இவர்களை தேடிச் செல்பவர். ரோலிங் மில்கள், எஃகு ஆலைகள் இவைகளை மன்னர்கள், பிரமுகர்கள் அவர்களுக்கு அழைத்துச் சென்று காட்டுவது அவருடைய முக்கியமான வேலைகளில் ஒன்று. பொமரேனியாவில் ஒரு ஸிவில் அதிகாரியின் மகன் இவர். இவர் மிகவும் திறமை மிக்கவர்.

ஒரு எண்ணைக் கம்பெனியில் தன் வாழ்க்கையை ஆரம்பித்தார். இரண்டாவது உலக மகாயுத்தத்தின் போது போலந்திற்கு அக் கம்பெனியின் டைரக்டராக அனுப்பப்பட்டார். போலந்தில் ஜெர்மன் வசமான எண்ணெய் வயல்களைத் திறமையாக நிர்வகித்தார். அவர் மிகவும் உபகாரமாக சேவை செய்ததை போலிஷ்காரர்கள் இன்னும் நினைவு வைத்துக்கொண்டிருக்கின்றனர். அரசியல் கைதிகள், யூதர்கள் இவர்கள் தப்பிச் செல்ல இவர் பெரிதும் உதவி செய்தவர்.

மேற்கு ஜெர்மனியில் பிரிட்டிஷ் பிராந்தியத்தில் மேற்பார்வையிடும் இன்சூரன்ஸ் போர்டு உதவி தலைவராக பிரிட்டிஷார் இவரை நியமித்ததிலிருந்து இவரது வாழ்க்கையின் இரண்டாவது கட்டம் ஆரம்பமாயிற்று. 1949 ல் இவர் பொது டைரக்டரானார். இவருடைய இன்சூரன்ஸ் கம்பெனி மேற்கு ஜேர்மனியிலே மூன்றாவது பெரிய இன்சூரன்ஸ் கம்பெனியாக விளங்கியது.

இந்தச் சமயத்தில் தான் ஆல்பிரட் கிரப் வான் போக்லன் உன்ட் ஹல்பர்க் என்பவர் தன்னுடைய 97 பல்வேறு கம்பெனிகளை நிர்வகிக்க ஒரு திறமையான ஆளைத் தேடிக் கொண்டிருந்தார். அநேக வருடங்களாகப் புகழ்பெற்றுவந்த இந்த ஸ்தாபனங்களுக்குத் திறமை மிக்க புதுநிர்வாகியின் சேவை தேவையாயிருந்தது.

பெர்தோல்ட் பெயிட்ஸிடம் கிரப்பிற்கு நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. ஆகவே தன் ஸ்தாபனங்களைச் சீர்திருத்தியமைக்கும் பொறுப்புகளை கிரப் அவரிடமே விட்டுவிட்டார். பெயிட்ஸை தனது பொதுப் பிரதிநிதியாக அவர் நியமித்தார். இவைகளைத் திறமையாக நிர்வகித்த இவருக்கு வருடத்தில் 12 லட்சம் ஜெர்மன் மார்க்குகள் (3,00,000 யு. எஸ். டாலர்கள் அல்லது 1,07,000 பவுன் ஸ்டர்லிங்) சம்பளம் கொடுக்கப்பட்டது என்று யு. எஸ். சஞ்சிகை 'நியூஸ்வீக்' கூறுகிறது.

இவர் பின்னர் பொருளாதாரத்துறையில் சிரத்தை காட்டினார். போலந்தின் கொமுல்கா, சிராங்கிவிக் ஆகிய பிரமுகர்களுக்கு தன்னிடமுள்ள அனுதாபத்தை அரசியல் துறையிலும் பொருளாதாரத்துறையிலும் எப்படி பயன்படுத்திக்கொள்வது என்பது இவருக்கு நன்றாகத் தெரியும். இவருடைய முயற்சிகளினால்தான் மேற்கு ஜெர்மனி போலந்துடன் நல்லுறவு கொள்ள முடிந்தது.

வார்ஸாவுக்கும் மாஸ்கோவுக்கும் இயந்திரங்கள், ரயில் என்ஜின்கள், லாரிகள் இவைகளை விற்பதற்காகச் சென்று வந்த பெயிட்ஸ் ஒரு முக்கியமான ராஜ்ய தூதராக மாறி பான், மாஸ்கோ, வார்ஸா இவைகளுக்கு இடையே நல்லுறவை ஸ்தாபிக்கும் முக்கிய புள்ளியாக மாறிவிட்டார்.

கிரப் ஒரு காலத்தில் ஹிட்லருக்கு பீரங்கிகள், வெடிகுண்டுகள் சப்ளை செய்து வந்தது. ஆனால் இன்று கிரப் ஸ்தாபனத்திற்கும் ஆயுத உற்பத்திக்கும் வெகுதூரம்.

## மகாராஷ்டிரா

பம்பாய், ஜன. 1

மகாராஷ்டிரா அரசாங்கம் வெளிநாட்டாருக்கான மதுக் கோட்டாவை உயர்த்தியிருக்கிறது. அரசாங்கத்தின் மதுவிலக்குக் கொள்கையில் அடிப்படை மாறுதல் கிடையாது என்றும் அது அறிவித்திருக்கிறது.

## முதல் மின்சார ரயில் என்ஜின்

புதுடில்லி, ஜன. 1

இந்தியாவின் முதலாவது மின்சார டீசல் ரயில் என்ஜின் வருகிற வெள்ளிக்கிழமை வெளிவரும். நடப்பு வருடத்திற்குள் ஆண்டொன்றுக்கு இவ்வித 83 என்ஜின்கள் உற்பத்தி செய்யப்படும்.

## சைபிரஸ்

நிக்கோஸியா, ஜன. 1

சைபிரஸ் இப்போது அமைதி நிலவிவருகிறது. பிரிட்டிஷ் திட்டம் அங்கு தோல்வியுற்றால், தாம் ஐ. நா. உதவியை நாடப்போவதாக அதிபர் ஆர்ச் பிஷப் மக்காரியோஸ் அறிவித்திருக்கிறார்.

## "யுத்தம் தவிர்க்க முடியாததல்ல" —சூ

ரபாட், ஜன. 1

முதலாளித்துவ நாடுகளுக்கும் சோஷலிஸ்ட் நாடுகளுக்குமிடையே யுத்தம் தவிர்க்க முடியாததல்ல என சீனப் பிரதமர் சூ-என்-லாய், இங்கு பிரெஞ்சு டெலிவிஷன் பேட்டியொன்றில் கூறினார்.

உலகின் சகல நாடுகளுடனும் சமாதான சகவாழ்வுக்காக சீனா போராடியிருக்கிறதென்றும் அவர் கூறினார்.

## மே. நிருபர்களுக்கு கம்போடியா கதவடைப்பு

சைகோன், ஜன. 1

கம்போடியாவைவிட்டு சகல மேற்குநாட்டு நிருபர்களும் விரைவாக வெளியேறுமாறு உத்தரவிடப் பட்டிருப்பதாக நான்பெங்கிலிருந்து இங்கு வந்து சேர்ந்த ஒரு அமெரிக்க நிருபர் கூறினார். 8 மேற்கு நாட்டு நிருபர்கள் குடியேற்ற இலாகாவுக்கு அழைக்கப்பட்டு விரைவில் வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டதாயும் அவர் கூறினார்.

## 15 ஆபிரிக்கர்களுக்கு சிறைத் தண்டனை

பிரிட்டோரியா, ஜன. 1

15 ஆபிரிக்கர்களுக்கு ஐந்து முதல் இருபது ஆண்டுச் சிறைவாசம் விதிக்கப்பட்டது. சதிநோக்கத்திற்காக ராணுவப் பயிற்சியளிக்க வெளிநாடுகளில் ஆள் திரட்டியதாக அவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

லொம்பார்ட் எம்பாடா என்பவருக்கு 20 ஆண்டுச் சிறை விதிக்கப்பட்டது. இருவருக்கு தலா 12 ஆண்டுகளும், ஒருவருக்கு 11 ஆண்டுகளும், ஒன்பது பேருக்கு தலா 10 ஆண்டுகளும், இருவருக்கு தலா 5 ஆண்டுகளும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

# புத்தாண்டில் மூன்று முக்கிய சம்பவங்கள்

## சிங்கள அமுல், இன்சூரன்ஸ், எண்ணெக் கம்பெனி

கொழும்பு, புதன்

இலங்கையில் இன்று நாடு முழுதும் சிங்களம் உத்தியோக மொழியாகியதை முன்னிட்டும், சகல இன்ஷூரன்ஸ்களையும் இலங்கை இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன் மேற்கொள்வதை முன்னிட்டும், பெட்ரோலிய விநியோகத்தை இலங்கை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் மேற்கொள்வதை முன்னிட்டும் கேற்றிரவு முழுதும் பிரித் ஓதப்பட்டது.

இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களை மேற்கொண்ட ஆருவது வருடாந்ததின மும் இன்று ஆகும். இந்த பிரித் வைபவத்தில் பிரதமரும், வர்த்தக மந்திரி திரு. மைத்திரி பாலசேனநாயக்காவும் பங்குபற்றிக்கொண்டனர்.

பெட்ரோல் விநியோகம் மேற்கொள்ளப்படுவதைத் தொடர்ந்து வேலையிழக்கும் பல ஊழியர்களுக்கு மாற்று வேலைகள் அளிக்கப்படுமெனத் தெரிகிறது.

# ஜனவரி முதல்திகதி பொன்எழுத்தால் பொறிக்கலாம்

## அரசாங்கத்தின் சாதனைகள்பற்றி நிதி மந்திரி

குருநாகல், புதன்

'ஜனவரிமுதல்திகதிநாட்டின் சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய சரித்திர பிரசித்தி வாய்ந்த நாளாகும். அன்றைய தினம் சிங்களம் உத்தியோக மொழியாக அமுல் செய்யப்படும், பெட்ரோலிய வர்த்தகம் தேசியமயமாக்கப்படும், மக்கள் வங்கி மூலம் கிராமிய மக்களுக்கு சகல வசதிகளும் அளிக்கப்படும்' என்று நிதி மந்திரி திரு. ரி. பி. இலங்கரத்ன நிக்கவரெட்டியா உபதேர்தலையொட்டி நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

திரு. இலங்கரத்ன மேலும் குறிப்பிட்டதாவது:

"திரு முதியான்சே தென்னக்கூன் 1956-ம் ஆண்டு தொடக்கம் தனது தொகுதிக்கு நற்சேவை செய்து வந்தார். அவருக்கு உதவி மந்திரிப்பதவிகள் கொடுக்கப்பட்டது. பின்னர் பதில் நிதிமந்திரிப் பதவியும் கொடுக்கப்பட்டது. யாராவது மக்களுக்காக நல்ல சேவை செய்ய ஆரம்பித்தால் பத்திரிகைகள் அவர்களை கட்டுரை மூலமோ கேலிச்சித்திரம் மூலமோ கேலி செய்வது வழக்கம். பிரதமரையும் மந்திரிகளையும் எத்தனையோ தடவைகள் பத்திரிகைகள் கேலி செய்திருக்கின்றன. அதுபோலவே திரு. முதியான்சே தென்னக்கூனையும் பத்திரிகைகள் கேலி செய்தபோது அவர் அதை தாங்க முடியாது போய்விட்டார். தன்னால் அவ்விதம் தாங்க முடியவில்லையானால் அதைப் பிரதமருக்கு அவர் தெரிவித்திருக்கலாம். பார்லிமெண்ட் அங்கத்துவத்தை ராஜினமாச் செய்துவிட்டு மீண்டும் ஏன் அவர் தேர்தலில் போட்டியிடவேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை".

280 லட்சம் ரூபா பெறுமதியான துணிவகைகள் இறக்குமதி செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், 320 லட்சம் ரூபா பெறுமதியான துணிவகைகள் இறக்குமதி செய்யப்பட்டபொழுதிலும் துறைமுக வேலைநிறுத்தம் காரணமாக விநியோகம் செய்யமுடியவில்லையென்றும் துணிப்பஞ்சம் ஏற்படாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தமிழ் பட்டினசபைக்கு சிங்கள காரியதரிசி

## நியமனத்தை ரத்துச்செய்யும் முயற்சி தோல்வி

நல்லூர், புதன்

காங்கேசன்துறை பட்டினசபைக்கு நியமிக்கப்பட்டுள்ள சிங்களக் காரியதரிசி திரு. பெரேராவின் நியமனத்தை ரத்துச் செய்ய எடுத்துக்கொண்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை.

முற்றிலும் தமிழ் வாக்காளர்களைக்கொண்ட பட்டினசபையின் செயலாளராக சிங்கள ஊழியர் கடமையாற்றுவதனால் ஏற்படக்கூடிய நிலைமை பற்றி ஸ்தலஸ்தாபன சேவைக்கமிஷனருக்குச்சுட்டிக்காட்டியபோது அவர் தாமும் இந்தக் கஷ்டங்களை உணர்ந்ததாகத் தெரிவித்தாரென்றும் இரு மாத காலத்திற்கு மட்டும் இந்த ஊழியரைக் கடமையாற்ற உதவும் படி கேட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

இன்று காங்கேசன்துறை பட்டினசபைக் காரியதரிசியாக பதவியேற்க வரும் திரு. பெரேராவிடம் காரியாலயப் பொறுப்புகளை ஒப்படைக்காமல் விடுவதென பட்டினசபை தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது.

## பிரிவுபசாரம்

வட்டுக்கோட்டை, புதன்

வட்டுக்கோட்டை தபாற்கந்தோர் அதிபாரகக் கடந்த 4 வருடகாலமாக அரிய சேவை செய்த திரு. எஸ். குலசிங்கத்தின் சேவையைப்பாராட்டி வட்டுக்கோட்டையாழ்ப்பாணக்கல்லூரியில்வட்டுக்கோட்டை கிராமச்சபைத் தலைவர் முதலியார் திரு. செ. சின்னத்தம்பி தலைமையில் இராப்போசன விருந்து நடைபெற்றது.

# "அரசாங்கத்தின் எதிர்காலம்"

குருநாகல், புதன்

இப்பொழுது ஆட்சி செய்யும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்காலம் பற்றி இம்மாதம் நாலாம் திகதி அறிந்து கொள்ளலாம். மக்களிடையே செல்வாக்கு எவ்வளவுக்கு உள்ளது என்பது பற்றி நிக்கவரெட்டியா உபதேர்தல் விடைபகரும்" என்று ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா நிக்கரவெட்டியா உபதேர்தலையொட்டி நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

திரு. டட்லி சேனநாயக்கா மேலும் குறிப்பிட்டதாவது:

நாட்டின் தற்போதைய நிலைக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மட்டுமல்லாது இடதுசாரி முன்னணியினரும் காரணகர்த்தாக்களாவர். அரசாங்கத்தின் மீது மக்கள் நம்பிக்கையிழந்துவிட்டனர் என்பதை அண்மையில் நடைபெற்ற ஸ்தலஸ்தாபன தேர்தல்கள் வெளிப்படையாக்கியுள்ளன. யு. என். பி. ஆட்சியிலிருந்தபோது அரசாங்கம் பொதுப் பணத்தை செலவிடுவதாக இடதுசாரியினரும், சுதந்திரக் கட்சியினரும் கண்டித்தனர். ஆனால் இப்பொழுது ஒவ்வொரு மந்திரியும் பொதுப்பணத்தைக் கொண்டு உல்லாசப் பிரயாணம் செய்து வருகிறார்கள். சுதந்திரக் கட்சியின் ஏழரை வருட ஆட்சி காலத்திலும் நாட்டில் பொருளாதார வீழ்ச்சியும் குழப்பமும், லஞ்சமும், ஊழலும் மலிந்துள்ளன. தொழில் தகராறுகள் நாளாந்த வழக்கமாக மாறியுள்ளது.

திரு. ஏ. ஸி. எம். ஹமீத் பேசுகையில் பண்டாரநாயக்காவின் கொள்கைகள் யாவும் தவிடு பொடியாகிவிட்டன வென்றும்அக்கொள்கைகளுக்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு விளக்கம் கொடுக்கிறார்கள எனவும் தெரிவித்தார்.

---

# "பத்திரிகைக் கமிஷனுக்கு மூலகர்த்தா முதியான்சே"

மாகோ, புதன்

"பத்திரிகைக் கமிஷன் திரு. முதியான்சேயின் குழந்தை என்றே சொல்லலாம். அவரின் சிபார்சின் பெயரிலேயே பத்திரிகைக்கமிஷன் நியமிக்கப்பட்டது என உணவு கூட்டுறவு மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா நிக்கவரெட்டியா உபதேர்தலையொட்டி நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவித்தார். திரு. டயஸ் பண்டாரநாயக்கா மேலும் குறிப்பிட்டதாவது:

"எனது நண்பனாக இருந்த திரு. முதியான்சே தென்னக்கூனுக்கு எதிராகப் பிரசாரம் செய்வதையிட்டு நான் மிகவும் மனவருத்தப்படுகிறேன். 1960-ம ஆண்டு தற்போதைய அரசாங்கத்தை ஆரம்பிக்கும் பொழுது பத்திரிகைகள் பற்றிய ஒரு விசேட கொள்கை எம்மிடம் இருந்தது. சிம்மாசனப்பிரசங்கத்தில் பத்திரிகைகளை தேசியமயமாக்குவது பற்றிக் குறிப்பிட்டிருந்தோம். பத்திரிகைகளைத் தேசியமயமாக்குவது பற்றி நான் பார்லிமெண்டில் விவாதித்தபோது அதை மெதுவாகச் செய்யலாம் என திரு. முதியான்சே தென்னக்கூனே ஆலோசனை கூறினர். அவரின் ஆலோசனையின் பெயரிலேயே பத்திரிகைக்கமிஷனும் நியமிக்கப்பட்டத. இவ்விதம் ஆலோசனை கூறிய திரு. தென்னக்கூன் பதில் நிதிமந்திரியாகப் பதவியேற்றதும் பத்திரிகைகள் தன்னைக் கண்டிக்கவே 24 மணித்தியாலங்களில் பத்திரிகைகளை தேசியமயமாக்க வேண்டுமென அவர் பிரதமரைக் கேட்டார். 24 மணித்தியாலங்களில் எவ்விதம் பத்திரிகைகளை தேசியமயமாக்குவது!"

# பழைய மாணவர் கூட்டம்

கோப்பாய், புதன்

கோப்பாய் வடக்கு சரவணபவானந்த வித்தியாசாலை பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக்கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத்தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ந. கந்தையா. உபதலைவர்:- திரு. வ. ச. செல்வரத்தினம். காரியதரிசி: திரு. க. தர்மலிங்கம். உப காரியதரிசி:- சீ. தி. அரசபிள்ளை. தனாதிகாரி: க. இராசலிங்கம்.

# "வடபகுதியில் நெற்காணி சட்டத்தை அமுல் நடத்துக"

## சிறுபான்மைத்தமிழர் மகாசபை தீர்மானம்

நல்லூர், புதன்

"வட பிரதேசத்தில் நெற்காணிச் சட்டத்தை அமுல் நடத்துமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் அ.இசிறுபான்மைத்தமிழர்மகாசபையின் உடுவில் கிளை அங்குரார்ப்பணக்கூட்டத்தில்நிறைவேற்றப்பட்டது.

அங்குரார்ப்பணக் கூட்டத்திற்கு மகாசபைத் தலைவர் திரு. எம். சி. சுப்பிரமணியம் தலைமை வகித்தார். நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் சில வருமாறு:-

எஸ். எஸ். சி. சித்தியடைந்த 15,000 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் காணி மந்திரியின் புதிய திட்டமான 150 குடியேற்றத்திட்டங்கள் நிறைவேற்றப்படும் போது எமக்கும் இடந்தர வகைசெய்யவேண்டும்.

உடுவில் தேர்தல் தொகுதியிலுள்ள மகாசபை ஆரம்பித்த பாடசாலைகளிலும் மற்றும் நமது பிள்ளைகள் கூடுதலாகக் கல்வி பயிலும் பாடசாலைகளிலும் மாணவர் விகிதாசரப்படி உதவி ஆசிரியர்களை நியமிக்கவேண்டும்.

உடுவில் தேர்தல் தொகுதியின் எல்லைக்குள்ளிருக்கும் தேநீர்க்கடைகளையும், கோவில்களையும் திறந்து விடும்படி உடுவில் எம். பி. யையும்,ஸ்தலஸ்தாபனத் தலைவர்களையும் இக்கிளை கேட்டுக்கொள்ளுகிறது.

இப் பகுதியிலிருந்து மக்களை நிலத்தைவிட்டு குடியெழுப்பும் நிலப்பிரபுத்துவக் கொடுமையைத் தடுத்துநிறுத்தச் சட்டம் கொண்டுவரும்படியும் நெற்காணிச்சட்டத்தை வடபகுதியில் அமுல் நடத்தவும் இக்கூட்டம் அராங்கத்தை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுன்றது.

# "தமிழ்ப்பிரதேசங்களில்போராடி வெற்றிபெறமுடியாது"

## முன்னுள் செனட்டர் கருத்து

நல்லூர், வியாழன்

'தமிழ் மொழிக்காக தமிழ்ப் பிரதேசங்களில் மட்டும் போராடி உரிமைபெறலாம் என்பது தவறான எண்ணமாகும். அகில இலங்கை ரீதியில் தமிழ் சிங்களத் தொழிலாளர்கள் ஒன்றுபட்டு அரசாங்கம் அமைத்தால் சகல பிரச்னைகளுக்கும் தீர்வுகாண முடியும்' என்று முன்னுள் செனட்டர் திரு. பொ. நாகலிங்கம் அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் உடுவில் தேர்தல் கிளை அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

மகாசபைத் தலைவர் திரு. எம். சி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் உடுவில் எம். பி. திரு. தர்மலிங்கம் பேசுகையில் நெற்காணிச்சட்டத்தை வடபிரதேசத்தில் அமுல் நடத்தும்படி கேட்டால் அதற்கு அரசாங்கம் செவி சாய்க்குமென்பது சந்தேகமானது என்று கூறினர்.

திரு. வி. பொன்னம்பலம் பேசுகையில் கூறியதாவது:

முன்னேற்றமடைந்துள்ள நாடுகளில் சிறுபான்மையினருக்கு உத்தரவாதமளிக்கும் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. இந்த நாட்டில உள்ள மக்கள் ஒன்றுபட்டு தமக்குள் உள்ள பிரிவுகளை அகற்ற பாடுபடவேண்டும்.

மொழியுரிமை வேண்டுமென்று போராடும் தமிழர்கள் தமக்கு கீழ் உள்ள மக்களுக்குரிய மனித உரிமைகளையும் வழங்க வேண்டும்.

திரு. எம். ஐயாத்துரையும் மற்றும் பலரும் பேசினர்.

# சோடாவில் அசிட் கலந்து விற்ருராம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் மின்சாரவீதியைச்சேர்ந்த நாகலிங்கம் ஏகாம்பரம் என்பவர் மீது, தொடரப்பட்ட சிசிலிக் அசிட் என்ற திராவகம் கலக்கப்பட்ட சோடாவை பொதுஜன விற்பனைக்கு வைத்து விற்றதாக யாழ்ப்பாண மாநகரசபை உணவுமருந்துபரிசோதகர் திரு.சின்னத்தம்பி ஆறுமுகத்தினுல்தொடரப்பட்ட வழக்கை விசாரணை செய்த யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசுவால்டன் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு ரூபா 50 அபராதம் விதித்தார்.

இவ்வழக்கை யாழ்ப்பாண மாநாரசபையின் சார்பில் உணவு மருந்துப்பரிசோதகர் திரு. சி. ஆறுமுகம் ஆஜராகி நடத்தினுர்.

---

## வாழ்க்கையில் பாதியை சிறையில் கழித்தார்

கொழும்பு, புதன்

"உன்னுடைய வாழ்நாளில் அரைவாசியை சிறையில்கழித்திருக்கிருய், அப்படியிருந்தும் நீர் திருந்தியதாகத் தெரியவில்லை. நீ இனித்திருந்தவும் முடியாது. மக்களை உன்னிடமிருந்து பாதுகாக்க வேண்டுமானல் உன்னை மக்கள் நடமாட்டம் குறைந்த சிறையிலேயேநிரந்தரமாகவாழவிடவேண்டும். உனக்குத்தகுந்த இடம் அதுவே."

இவ்வாறு 35 வயதுடை அப்துல்குவாமத் என்பவருக்கு மூன்றுவருடகால கடுழியச்சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்புவழங்குகையில் தெரிவித்தார். வீட்டில் புகுந்து திருடினரென இவர் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார். தான் இதற்கு முதல் 20 தடவைகள் குற்றஞ்செய்து தண்டிக்கப்பட்டதை திரு. குவாமத் ஒப்புக்கொண்டார்.

குறிப்பிட்ட நபர் தனது 35 வருட வாழ்க்கையில் 25 வருடங்களை சிறையிலும் புனருத்தாரணப்பாட சாலையிலும்கழித்தவர். 1928-ம் ஆண்டு கோழிகளவாடியதற்காக முதன்முதலில் இவர் குற்றஞ்சாட்டப்பட்டார். இவ்விதம் 12 தடவைகளில் கோழிகளவாடிக் குற்றவாளியாகக் காணப்பட்டார். இதன் பின்னர் இவர் களவாடுவதில் ஈடுபட்டு அதையே தொடர்ந்து நடத்துகிருர்.

---

## இ. போ. ச. மரியாதைவாரம்

நல்லூர், புதன்

இன்று தொடக்கம் ஒருமாதகாலத்திற்கு இலங்கை போக்குவரத்துச்சபை மரியாதை மாதம் கொண்டாட ஏற்பாடுகள் செய்துள்ளது.

இ. போ. ச. ஊழியர்கள் பொதுமக்களின் நல்லெண்ணத்தைப்பெறவும், போக்குவரத்துச்சேவை சிறப்பாக நடைபெறவும் வகைசெய்யுமுகமாகவே இந்த மரியாதை மாதம் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. இந்த மாதத்தில் சிறந்த மரியாதைக்கு உரியவர்களான இ. போ. ச. ஊழியர்களுக்கு கௌரவமளிக்கப்படுமெனவும், மரியாதைக்குறைவாக நடந்துகொள்ளுபவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அறியப்படுகிறது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### வியாழன் 2-1-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஓடி விளையாடு பாப்பா, 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 கிளாரினெட்.

இரவு 7-00 'நாடும் நாமும்'—பேச்சு, 7-15 நேயர்விருப்பம், 7-45 'எண்ணத்தில் மண்' — 8-00 முன்விம்நிகழ்ச்சி, 9-15 கலைக்கோவை, 9-30 குரல் வகை, 10-00 நிலைய ஒலிப் பதிகள்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15 பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கலஇசை, 6-45 நிகழ்ச்சிக்குறிப்புகள், 6-50 துதிபபாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்தியக் கோஷ்டி, 7-30 துதிப்பாடல்கள்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 திரைப்பட இசை, 1-30 வாத்தியஇசை, 1-50 குரலிசை, 2-10 இசைக் கோவை.

மாலை 5-15 துதிப்பாடல்கள், 5-45 ஆகாஷ்வாணி ஒலிப் பதிவுகள், 6-20 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இசைவிழா (சென்னை அஞ்சல), 9-15 சுபத்தசங்கீதம், 9-30 இசை விழா (சென்னை அஞ்சல்).

---

## போராட்டத்தின்...

(1-ம் கலத் தொடர்ச்சி)

பொருட்படுத்தாது ஏராளமான மக்கள் ஊர்வலத்திலும், கூட்டத்திலும் பங்குபற்றினர்.

மன்னார் முற்றவெளியிலிருந்து ஆர்ப்பாட்ட ஊர்வலம் மன்னார் கச்சேரியை நோக்கிச் சென்றது அங்கு மன்னார் எம். பி. திரு. வி ஏ. அழகக்கோன் அரசாங்க அதிபரிடம் தமிழில் எழுதிய கடிதம் ஒன்றை சமர்ப்பித்தார். இதைப் பெற்றுக் கொண்ட அரசாங்க அதிபர் "நான் என்ன செய்ய முடியும்?" எனக் கேட்டார். அதன் பின்னர் கச்சேரி முன்வாசலில் வைத்து தனிச்சிங்கள சட்டப்பிரதியை திரு. வி. ஏ. அழகக்கோன் தீயிலிட்டார். ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் திரு. சி. கதிரவேற்பிள்ளை, இ. தொ. க. மன்னார் மாவட்ட பிரதிநிதி திரு. எஸ். ஆர். எம். வேலுசாமி, திரு. திரு. ஐ. ஆர். ஜேம்ஸ் ஆகியோரும் பங்குபற்றினர்.

பின்னர் ஊர்வலம் கச்சேரியிலிருந்து திரும்பி மன்னார் முற்றவெளியை வந்தடைந்தது. ஆர்ப்பாட்டம் அமைதியாகவும், சமாதானமாகவும் பொலிஸ் கண்காணிப்புடன் நடைபெற்றது. முற்றவெளியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தமது தலைமையுரையில் திரு. வி. ஏ. அழகக்கோன் குறிப்பிட்டதாவது:-

இன்று எமக்கு வருடப் பிறப்பு பெருநாளாக இருந்த பொழுதிலும் தமிழ் பேசும் சமூகத்தவருக்கு அது கரிநாள். இன்றைய ஆர்ப்பாட்டம் சிங்கள எதிர்ப்பு இயக்கத்தின் முதற்படியாகும். 99 சத விகிதம் தமிழ் பேசும் மக்கள் வாழும் மன்னார் மாவட்டத்தில் தனிச்சிங்களத்தை புகுத்துவது சிங்கள ஆட்சியாளரின் கொடுமையைக் காட்டுகின்றது."

திரு. எஸ். ஆர். எம். வேலுச்சாமி பேசுகையில் அரசாங்கம் மொழிப்பிரச்னையையும், நாடற்றவர் பிரச்னையையும் கட்டவிழ்த்து தமிழர்களை நசுக்குவதாகவும், அதற்கான எதிப போராட்டத்தை எந்தக் கட்சி நடத்தினாலும் அதற்கு பூரண ஒத்துழைப்பைக் கொடுக்க தாம் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

திரு. ஐ ஆர். ஜேம்ஸ் பேசுகையில் மொழியை எம்மீது திணிக்கத் துணிந்த அரசாங்கம் பௌத்த மதத்லதயும் திணிக்க வழி செய்யுமென்றும் கிறிஸ்தவ புதுவருட தினம் விடுமுறையாக்கப்படாதது இதற்குச் சான்றாகும் எனவும் தெரிவித்தார்.

---

## "சிங்களத்தை திணித்தால்...

(1-பக்கத் தொடர்ச்சி)

ரக்கணக்கான மக்கள் நகர மண்டபத்தின் உள்ளேயும் வெளியேயும் திரண்டிருந்தஇக் கூட்டத்தில் திரு. சிவசிதம்பரம் தொடர்ந்துகூறியதாவது:

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட இலங்கை முழுவதிலும் இன்றுமுதல் சிங்களத்தை உத்தியோக மொழியாக்கிவிட்டோம் என்றுகூறிய அரசாங்கத்திற்கு தமிழ் மக்கள் இன்று நல்லபாடம் படிப்பித்துவிட்டார்கள். கச்சேரி வாசலில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பார்த்துக் கொண்டிருக்க பல்லாயிரக்கணக்கான மக்களின் கரகோஷத்துக்கிடையே சிங்களச்சட்டப் பிரதி கொளுத்தப்பட்டது. கச்சேரிக்கு வந்தால் குண்டாந்தடியால் விரட்டியடிப்போம் என்று கூறிய பொலிஸார் எங்களை வரவேற்று உள்ளே செல்லவிட்டார்கள். தமிழ் மக்கள் சக்தி ஒன்று திரண்டுவிட்டதென்பதை இன்று அரசாங்கம் அறிந்து கொள்ளும். தமிழ் மக்கள் புறமுதுகு காட்டாதவர்கள் என்பதைப் புரிந்து கொள்வார்கள். தமிழ்பேசும் மக்களை அடித்தோ துன்புறுத்தியோ கட்டுப்படுத்த முடியாது என்பதை ஆட்சியாளர் இன்று அறிந்து கொள்வார்கள்.

சென்ற மாதம் நடந்த வடமாகாண அதிபர் மகாநாட்டில் நாங்கள் தமிழில் பேச அனுமதி தர மறுத்த அதே அரசாங்க அதிபருடன் இன்று நாங்கள் தமிழில்பேசி தமிழ் மகஜரைச் சமர்ப்பித்தோம்.

தமிழ்பேசும் மக்களை அடிபணிய வைத்துவிட்ட திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இன்று இங்கு நடந்த சிங்கள எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தைப்பற்றி அறிந்து கொள்வார். சிங்களப் பத்திரிகையாளரும் படப்பிடிப்பாளரும் இங்கு வந்திருப்பதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். இங்கு அவர்கள் நேரில்கண்ட நிகழ்ச்சிகளை சிங்களச் சகோதரர்களுக்கு எடுத்துக் கூறுவார்கள் என நம்புகிறேன். இன்று நடந்த ஆர்ப்பாட்டத்தின் மூலம் தமிழ்பேசும் மக்கள் நூற்றுக்கு நூறு வீதம் சிங்களத் திணிப்பை எதிர்க்கிறார்கள் என்பதை அறிந்திருப்பார்கள்'

இந்த அரசாங்கம் மக்களின் உரிமையுடன் விளையாடுகிறது. இது நெருப்புடன் விளையாடுவது போன்றதென்பதை தெரிவிக்க விரும்புகிறேன். கச்சேரிக்குச் சென்றால் அடிவிழும் என்று கேலி பேசிய இடதுசாரி நண்பர்கள் முகத்தில் தமிழ்மக்கள் இன்று கரிபூசிவிட்டார்கள். கட்சிபேதங்களை மறந்து நாம் இப்போது போராட்டத்தில் குதிக்கவேண்டும். முதலில் தமிழன் என்ற உணர்ச்சி இருக்க வேண்டும். பின்புதான் கட்சி இருக்க வேண்டும். எதிர்வரும் போராட்டங்களில் எல்லோரையும் குதிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

உடுப்பிட்டி தமிழரசுக்கட்சிப் பிரமுகர் திரு. ஜெயக்கொடி பேசும்போது கூறியதாவது:

கூட்டம் கூடி அறிக்கைவிட்ட காலம் போய்விட்டது. தலைவர் கூறுவதைப் பின்பற்ற எல்லோரும் ஆயத்தமாக இருக்கவேண்டும். ஏன் என்று கேளாது பணியாற்ற வேண்டும். யுத்தத்தில் தளபதியின் கட்டளையை நிறைவேற்றுவது படைவீரனின் கடமை தலைவர்களின் கட்டளைவரும் வரை பொறுமையாக இருப்போம்.

ஆங்கிலம், சிங்களம் தெரிந்தாலும், அரசாங்கத்துடன் கருமங்களைப்பயமின்றி தமிழில் செய்யவேண்டும். அரசாங்க அதிபரோடு கடிதத் தொடர்பு, விசாரணை எல்லாம் தமிழில் வைக்கவேண்டும். இப்படி நிலைமைமாறினல், சிங்களவர்களே தமிழைக் கற்கவேண்டிய காலம்வரும். சிங்களத்தில் எழுதினல் பதில் வரும் என்பதற்காக யாரும் சிங்களத்தில் எழுத முயற்சிக்கவேண்டாம். தமிழில் கடிதம் அனுப்பினல் தமிழ் குமாஸ்தாவிடம் கொடுக்கப்படும். அதனல் தாமதம் ஏற்படாது. பிரசங்கம் செய்வதால் பிற்கால சந்ததிக்கு பிரயோசனமில்லை. ஒன்றுபட்டு உறுதியுடன் செயலில் இறங்கவேண்டும்.

தமிழ் மக்கள் மீது சிங்களத்தைத் திணிப்பதற்காக, சிங்கள உத்தியோகத்தர் சிலரை அரசாங்கம் கச்சேரிக்கு அனுப்பியிருக்கிறது. பகிஷ்கரிபபு இயக்கத்தை அமுல் நடத்தினல் சிங்கள ஊழியர்கள் ஒருவரும் இங்கே வர விரும்பமாட்டார்கள். சொந்த நாட்டில் இரண்டாந்தரப் பிரஜையாக நாங்கள் வாழவேண்டுமா? இதுவும் ஒரு வாழ்வா? அரசாங்க உத்தியோகம் தமிழர்களுக்கு கிடையாது என்பது நிச்சயமாகிவிட்டது.

நாங்கள் தடுப்புக்காவலில் இருந்தபோது ஒரு கமிட்டி அமைத்து ஆலோசனை செய்தபோது தமிழர்கள் கலியாண வீடு, செத்தவீடு, திருவிழாக்களில் அதிகம் பணம் செலவழிக்காமல் செலவைக் குறைக்கவேண்டும் என்று தீர்மானித்தோம். அதேபோல் ஆடம்பரஉடைகளிலும்வீணைகப் பணத்தைச் செலவு செய்யக்கூடாது. தமிழர்களின் வருமானத்தைக்கூட்டுவதற்கு வீடுகளில் கோழி, ஆடு வளர்ப்பதோடு தோட்டம் செய்யவேண்டும்'.

தமிழரசுக்கட்சி மாதர் முன்னணியைச் சேர்ந்த திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பேசியதாவது:

தமிழரசுக்கட்சி சில நாட்கள் ஓய்வு கொடுத்து மீண்டும் போராட்டத்தை ஆரம்பித்திருக்கிறது. கட்சி வேறுபாடில்லாமல் எல்லோரும் கலந்துகொள்ளவேண்டும். இன்று வந்த ஜனக்கூட்டம் வேடிக்கை பார்க்கவோ விளையாடட்டுப் பார்க்கவோ வந்த ஜனக்கூட்டமல்ல. உண்மையிலேயே உணர்ச்சிவசப்பட்டு மனதில் உறுதி கொண்டுவந்த கூட்டம். அதிகாலையிலேயே கோட்டை மைதானத்தில் ஆண், பெண், தாய், மாணவர்கள் பல்லாயிரக்கணக்கணக்காகக் கூடினர்கள். நடக்க முடியாத ஒரு வயோதிபத் தாய், தடியின் உதவியோடு மிகுந்த ஆர்வத்துடன் ஊர்வலத்தில் கலந்துகொண்டார். பத்து வயது நிரம்பாத ஒரு சிறு குழந்தைகூட தனது பிஞ்சுக்கரத்தில், கறுப்புக் கொடி ஏந்தி ஊர்வலத்தில் பங்குபற்றியது. இவையெல்லாம் உங்களுக்கு எதை எடுத்துக்காட்டுகிறது. சிங்களத் திணிப்பு நிறுத்தப்படும்வரை போராட சிறு குழந்தை முதல் பாட்டிவரை புறப்பட்டுவிட்டார்கள் என்பதையே இந்த ஆதரவு உற்சாகம் என்றும் இருக்கவேண்டும். கட்டப்பொம்மன் காலத்தில் ஆரம்பித்து காந்திஜியின் காலத்தில்தான் இந்தியாவிற்கு சுதந்திரம் கிடைத்தது. ஆதலால் எமக்கு சுதந்திரம் சீக்கிரம் கிடைக்கவில்லை என்று மனதைச் சோரவிடக்கூடாது. தொடர்ந்து உறுதியுடன் போராடவேண்டும்.

வேறு கட்சி ஆரம்பிக்காததால் தமிழரசுக்தட்சி போராட்டத்தைஆரம்பித்திருக்கிறது. எல்லாக் கட்சிகளும் இதில் பங்குபற்றவேண்டும். தமிழ் மக்களின் ஜீவமரணப் போராட்டம் இது. ஆதலால் கட்சிபேதமின்றி யாவரும் கலந்துகொள்ளவேண்டும்.

---

## "பெரும்பான்மை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாங்கம் தயாராகவிருக்கிறது" என்றும் பிரதமர் கூறினர்.

"மக்களின் பரந்த நலனுக்காக தேசியமயமாக்குதல் நடைபெறுகிறது. இதனல் அரசாங்கத்திற்குப் பல சோதனைகளும், துயரங்களும் ஏற்படலாம். இது இலங்கைக்கு மட்டும் புதிய பிரச்னை அல்ல. முற்போக்கு நடவடிக்கைகளைத் தடைசெய்ய முனையும் சக்திகளை பொறுமையுடன் சகித்து, அரசாங்கம் மக்களுக்குக் கடமைசெய்ய வேண்டியிருக்கிறது.

அயல் நாட்டாரும் மக்களில் ஒரு பகுதியினரும் கொண்டிருந்த உரிமையை எல்லா மக்களுக்கும் அளிப்பதே அரசாங்கத்தின் நோக்கம். வெளிநாடு செல்லும்செல்வத்தைத்தடுத்து அதை மக்களின் புனருத்தாரணத்துக்கு உபயோகிக்க வேண்டும். உற்பத்தியில் நஷ்டமேற்படுவது சமுதாயத்திற்குத் தீங்கானது. தேசியமயமாக்கப்பட்ட துறைகளில் நஷ்டம் ஏற்படுகிறதென்றும், அவை திறமையாக நிர்வகிக்கப்படவில்லை என்றும் குறை கூறுபவர்கள், பெரும்பான்மையினரின் நலன்களை மனதில் கொள்ளவேண்டும்" எனறும் பிரதமர் கூறினர்.

---

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மாணிக்கம்பிள்ளை இவர்களை அந்தப் புண்ணிய ஸ்தலத்தில் கௌரவிப்பதாயும், முதல் அமைச்சர் பக்தவத்ஸலம் விழாவுக்குத் தலைமைவகிப்பதாயும் ஓர் அன்பழைப்புக்கிடைத்தது.

ஊர்வலம், பிரார்த்தனை, வரவேற்பு, பாராட்டுரை, முதல் அமைச்சர் பேச்சு, மற்றபேச்சுகள் முதலிய நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன. என் உடல் தான் இங்கு. உள்ளமெல்லாம் அங்குதான். என்னசெய்யலாம்!

* * *

கையார்வளை சிலம்பக்  
காதர் குழையாட  
மையார் குழல்புரளத்  
தேன்பாய வண்டொலிப்பச்  
செய்யானை வெண்ணீறணிந்  
தானைச் சேர்ந்தறியார்க்  
கையானை எங்குஞ்  
செறிந்தானை யன்பர்க்கு  
மெய்யானை யல்லாதார்க்  
கல்லாத வேதியனை  
ஐயாறமர்ந்தானைப்  
பாடுதுங்காண் அம்மானாய்.  
—மாணிக்கவாசகசுவாமிகள்

---

## இடமாற்றம்

ஊர்காவற்றுறை, புதன் ஊர்காவற்றுறை, கரம்பன் சண்முகநாதமகா வித்தியாலய அதிபராகக கடமையாற்றிய திரு. வில்வரத்தினம் புங்குடுதீவு மகாவித்தியாலய அதிபராகவும், அராலி இந்து ஆங்கில பாடசாலையில்அதிபராகக் கடமையாற்றியதிரு. சபாரத்தினம் கரம்பன் மகாவித்தியாலய அதிபராகவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.


### தேவை

கொழும்பில் முதல்தரமான ஒரு ஹோட்டலுக்கு ஒரு மனேஜர், ஒரு உதவி மனேஜர், 2 காஷியர்கள், 3 சிப்பந்திகள் (Waiters), 2 சமையல்காரர்கள் உடனடியாகத் தேவை. விண்ணப்பக்காரர்கள் தங்கள் நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் விண்ணப்பிக்கவும். விபரங்களுக்கு: No 18, சப்பல் (Chapel) வீதி, யாழ்ப்பாணம். 1827

### உப-ஏஜெண்டுகள்

'சொனென் சைன்' பற்றிகள் (ஜெர்மன் தயாரிப்பு) விற்பனை செய்வதற்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவனியா, மன்னார் ஆகிய இடங்களுக்கு உப-ஏஜெண்டுகள் தேவை. விபரங்களுக்கு முருகன் எலக்றிகல் ஸ்டோர்ஸ், 6/8, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம். 1804

விற்பனையாகிறது!  
ஈழநாடு  
தினக்குறிப்பு  
1964  
விலை ரூபா 1-00

### விளம்பரம்

### நிருபர் தேவை

திருக்கோணமலை, மூதூர், கல்முனை ஆகிய இடங்களில் நிருபர் தேவை. விண்ணப்பிக்கவும்: ஆசிரியர், "ஈழநாடு", த. பெ. எண் 49, யாழ்ப்பாணம்.

### சொனென் சையின் பற்றறிகள்

விற்பனைக்குப்பின். எமது சிறந்த சேவைகள் உங்கள் பற்றறிகளுக்குக் கிடைக்கும். விலை நிதானம்.

துரை அன்ட் கோ  
23/3 ஸ்ரான்லி வீதி,  
யாழ்ப்பாணம். 1809

### மானிப்பாய் மகளிர் கல்லூரி

சேர்தல் விண்ணப்பம் 1964

1965-ம் ஆண்டு நடைபெறும் (G. C. E. Ad. Level Arts) உயர்தர வகுப்புப் பரீட்சைக்குரிய வகுப்பிற் சேர்தற்கு விண்ணப்பங்கள் ஏற்கப்படும். விபரங்களுக்கு கல்லூரிக் கந்தோருக்கு விண்ணப்பிக்கவும்  
1815 அதிபர்

### விற்பனைக்கு

சிங்கர் தையல் கால் மிசின் ஐந்து சொருகு பெட்டிகள் கொண்ட 15 K 110 வகை- விசுவலிங்கம், த. பெ. இலக்கம் 17, யாழ்ப்பாணம். 1820

### 'ஐந்து கண்டங்கள்'

சிறுவர்களுக்குப் பயன் தரும் நூல். விலை சதம் 10. தபாலில் பெறவிரும்புவோர் இரண்டு பத்துச்சத முத்திரைகளுடன் விண்ணப்பிக்கவும். சாரதா புத்தகசாலை, தேவாலய வீதி, யாழ்ப்பாணம். 1825

### தேவை

புளுறிபன் ஹோட்டலில் வேலை செய்வதற்கு சமையல் தெரிந்த பையன் தேவை. விண்ணப்பிக்கவும்: புளுறிபன் ஹோட்டல், 25, கச்சேரி நல்லூர் றேட், யாழ்ப்பாணம். 1826



### பொதுமக்களே!

உங்கள் கவனத்திற்கு ஆ. சி. சின்னையா நகைமாளிகை.

உங்கள் அழகுமிகு ஆபரணங்கள் நவநாகரீக முறைப்படி குறித்த திகதியில் செய்து உத்தரவாதத்துடன் கொடுக்கும் நம்பிக்கையுடைய நகைமாளிகை ஆ. சி. சின்னையா நகைமாளிகையே!

ஆ. சி. சின்னையா, அன் சன்ஸ், நெல்லியடி, கரவெட்டி.  
1697

# "மறியல் இயக்கம் திடீரென தொடங்கும்

# சிங்கள அமுல் எதிர்ப்பு இயக்கம் பூரண வெற்றி"

## எஸ் ஜே. வி. அறிவிப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

**"சிங்கள எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முழு வெற்றியளித்திருக்கிறது. தமிழ்பேசும் மக்களின் ஏகோபித்த எதிர்ப்பைக் கண்டு அரசாங்கம் பேசாமலிருந்துவிட்டது. யாழ்ப்பாணத்திற்குச் சிங்கள ஊழியர்கள் அனுப்பப்பட்டிருந்தாலும் எந்தக் கந்தோரிலும் இன்னும் சிங்களம் அமுல்செய்யப்படவில்லை. ஆதலால் தொடர்ந்து ஆர்ப்பாட்டம் நடைபெருது. எந்தக் காரியாலயத்தில் சிங்களம் அமுல்செய்யப்படுகிறதோ, அந்தக் காரியாலய வாசலில் திடீரென மறியல் செய்வோம்".**

**தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் நேற்று மாலை ஈழநாடு நிருபருக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

திரு. செல்வநாயகம் மேலும் கூறியதாவது:

இலங்கை முழுவதும் நேற்று சிங்களம் உத்தியோக மொழியாக அமுல்செய்யப்பட்டுவிட்டதாக அரசாங்கம் அறிவித்தபோதிலும் யாழ்ப்பாணத்தில் எந்தக் காரியாலயத்திலும் இன்னும் சிங்களம் அமுல்செய்யப்படவில்லை. கந்தோர் வேலைகள் வழக்கம்போல நடைபெற்றுவருகிறது. ஆதலால் தொடர்ந்து இன்றும் ஆர்ப்பாட்ட ஊர்வலமோ, சட்ட மறுப்போ செய்யவேண்டிய அவசியமில்லை. நாங்கள் ஒவ்வொரு நாளும் நிலைமையை அவதானித்துவருவோம். எந்தக் கந்தோரில் சிங்களம் அமுல்செய்யப்படுகிறதோ அந்தக் கந்தோரின் வாசலில் திடீரென மறியல்செய்வோம். சிங்கள அமுல் நீக்கப்படும்வரை மறியல்செய்வோம். ஒரேசமயத்தில் இரண்டு மூன்று கந்தோர்களில் மறியல் செய்ய வேண்டிய நிலையும் ஏற்படும். இதற்கான தொண்டர்களையும், திட்டங்களையும் தயாராக வைத்திருக்கின்றோம்.

# சிங்கள ஊழியர் வந்து திரும்பினர்!

காங்கேசன் துறை, புதன்

காங்கேசன் துறைப் பட்டின சபையின் காரியதரிசியாக நியமிக்கப்பட்ட சிங்கள ஊழியர் திரு. பெரேரா இன்று காலை பதவியேற்க வந்ததும் அவரை காரியதரிசியாக ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் இதுபற்றி ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனுடன் கடிதத் தொடர்பு நடைபெற்றுக்கொண்டிருப்பதாகவும் பட்டின சபைத்தலைவர் திரு. மு திடவீரசிங்கம் அவரிடம் தெரிவித்தார்.

கொச்சிக்கடை பட்டனசபை காரியதரிசியாகக் கடமையாற்றியகாங்கேசன் துறைப்பட்டின சபைக் கந்தோருக்கு வந்தபொழுது சபைக் காரியதரிசியின் அறை பூட்டப்பட்டிருந்தது.

பட்டின சபைக் காரியதரிசியாக ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனருடன் இதுபற்றிக் கடிதத் தொடர்பு நடைபெற்று வருவதாகவும் தாம் ஒருமாத காலமாக இந்த நியமனம் குறித்து கடிதமும் தந்திகளும் அனுப்பியபோதிலும் பதில் கிடைக்காததால் இப்பொழுது பதவியேற்க அனுமதியளிக்க முடியாதென்றும் பட்டின சபைத் தலைவர் திரு. பெரேராவிடம் தெரிவித்தார்.

இதை எழுத்தில் தருமாறு திரு. பெரோரா கேட்கவே தலைவர் தமிழில் ஒரு குறிப்பு எழுதிக் கொடுத்தார். அந்தக் குறிப்புடன் ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷன் தலைவரைத் தாம் சென்று சந்திப்பதாகக் கூறி திரு. பெரேரா திரும்பிச் சென்றார்.

இதுவரை காங்கேசன் துறைப் பட்டினசபைக் காரியதரிசியாகக் கடமையாற்றி கொச்சிக்கடை பட்டினசபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள திரு. சி. கந்தசாமி தமது புதிய பதவியை ஏற்கச் செல்லவில்லையென்றும் இப்பிரச்னை முடிந்து பொறுப்பு ஒப்படைக்கப்படும்வரைசெல்ல வேண்டாமென்று பட்டின சபைத் தலைவர் கூறியிருப்பதாகவும் அறியப்படுகிறது.

# "தமிழ் ஊழியர்களுக்கு அநீதி விளைவிக்கமாட்டோம்"

## யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் உறுதி

யாழ்ப்பாணம், வியாழன்

"நேற்றுத் தொடக்கம் யாழ்ப்பாண மாவட்டத்திலும் சிங்களம் மட்டும் சட்டம் அமுல் நடத்தப்படுகின்றதாயினும் பொதுமக்களை அது எவ்வழியிலும் பாதிக்காதவகையில் அமுல்நடத்தப்படுகின்றது." என்று யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜயவீரா பத்திரிகை நிருபர்களுக்கு அறிவித்தார்.

திரு. ஜயவீராவினல் கூட்டப்பட்டு யாழ்ப்பாணக் கச்சேரி ஆலோசனை மண்டபத்தில் நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் இவ்வாறு குறிப்பிட்டார்.

இப்பகுதியில் சிங்களம் அமுல்நடத்தும்போது இப்பகுதி மக்களுக்கு எவ்வழியிலும் அநீதி விளைவிக்காதவகையிலும் அவர்களுக்குக் கஷ்டம் ஏற்படாதவகையிலும் கவனிக்கப்படுமென்றும் தமது நேரடியான கண்காணிப்பின் கீழேயே சிங்களச் சட்டம் இங்கு அமுலுக்குக்கொண்டுவரப்படுமென்றும் தெரிவித்தார் சிங்கள அமுலினல் சிங்களம் தெரியாத உத்தியோகத்தர் பாதிக்கப்பட விடமாட்டாரென்றும் அவர்களுக்கு நீதி செலுத்தப்படுமென்றும் கொழும்பிலுள்ள தலைமைக் கந்தோர்களுடன் உள்ள தொடர்பு சிங்களத்தில் தற்போது இருக்குமென்றும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

நேற்று தமிழரசுக்கட்சியினல் நடாத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் குறித்து திரு. ஜயவீராவின் அபிப்பிராயத்தை ஒரு நிருபர் கேட்டபோது, தமது குறைகளைத் தெரிவிக்கத் தமிழ் மக்களுக்கு உரிமையுண்டென்றும், அவ்வார்ப்பாட்டத்துக்கான ஊர்வலத்துக்கும், ஒலிபரப்பி உபயோகத்துக்கும் உத்தரவு கொடுத்தது அரசாங்கத்தின் தாராள மனப்பான்மையைக் காட்டுவதாகுமெனவும், இராணுவ நடமாட்டமேயில்லாது பொலிஸார் மட்டும் கடமையாற்றினரென்றும், அவர்களும் பார்வையாளர்களாகவே இருந்தனரென்றும் தெரிவித்தார்.

மேலும் ஒரு நிருபரின் கேள்விக்கு அவர் பதிலளிக்கையில் அரசாங்கம் இவ்வித சலுகைகள் அளித்தது பலவீனத்தினலல்லவென்றும் தாராளசிந்தையே எனறும் எச்சம்பவத்தையும் அரசாங்கம் சமாளிக்கும் வல்லமையுடன் இருக்கிறதென்றும் குறிப்பிட்டார்.

## 8-ந் திகதி மேயர் தெரிவு

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாண நகரின் புதிய மேயர் தெரிவு இம்மாதம் 8-ந் திகதி பிற்பகல் 3 மணிக்கு நடைபெறுமென அறியப்படுகிறது. 17 அங்கத்தவர்களைக் கொண்ட புதிய மாநகர சபையின் முதற் கூட்டம் 8-ந் திகதி பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். அன்றைய கூட்டத்தில் மேயர், உதவி மேயர் தெரிவு நடைபெறும்.

## தென்னுபிரிக்கா 274 ரன் எடுத்து அவுட்

மெல்போன், ஜன 1

ஆஸ்திரேலியாவுக்கும் தென்னுபிரிக்காவுக்குமிடையே இங்கு நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் தென்னுபிரிக்கா தன் முதலாவது இன்னிங்ஸில் 274 ரன்கள் எடுதது அவுட் ஆனது.

---

நியூயோர்ச், ஜன. 1

இங்கு கூடிய பத்துலட்சம் குழுக்களைக் கொண்ட கம்யூனிஸ்ட் எதிர்ப்புக்கமிட்டி இருசீனக்கொள்கையை உருவாக்க முயல்வதாய் அமெரிக்க உதவி வெளிநாட்டு மந்திரி மீது குற்றஞ்சாட்டியுள்ளது.

---

(5-ம் கலத் தொடர்ச்சி)

இன்று மாலை 5 மணிக்கு நகர மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு ஏராளமான மக்கள் வந்திருந்தனர். திரு. இராசமாணிக்கம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. இராசதுரை, செனட்டர் திரு. மாணிக்கம், திரு. அரியரத்தினம், திருமதி, உலகசேகரம் ஆகியோரும் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினர்.

"தனிச்சிங்கள சட்டம்

# பெரும்பான்மை பலத்தினுல் நிறைவேற்றப்பட்டது

## புரட்சிமூலம் இதை எதிர்த்தாலும் சட்டவிரோதமாகாது"

—திரு. இராசமாணிக்கம்

மட்டக்களப்பு புதன்

கடந்த மூன்று தினங்களாக கடும்மழை தொடர்ந்து பெய்து கொண்டிருந்த போதிலும் இன்று மட்டக்களப்பில் மழை ஓய்ந்திருந்தது. இன்று பகல் 12 மணிக்கு தபாற்கந்தோருக்கு முன்பாக ஆரம்பித்த ஊர்வலம் கச்சேரி வாசலை அடைந்தது.

கிழக்கு மாகாண எம்.பி.க்களும் தமிழரசுப் பிரமுகர்களும் ஆயிரக்கணக்கான பொதுமக்களும், கூடிநிற்க பட்டிருப்பு எம். பி.யும் தமிழரசுக் கட்சித் தலைவருமான திரு. எஸ. எம். இராசமாணிக்கம் சிங்கள சட்ட பிரதியை தீயில் கொளுத்தினர். அதன் சாம்பலை அறப்போர் முன்னணித் தலைவர் திரு, அரியரத்தினம் மட்டக்களப்பு வாவியில் கரைத்தார்.

சட்டப் பிரதியை எரிக்கு முன்னர் நடைபெற்ற கூட்டத்தில் திரு. எஸ. எம். இராசமாணிக்கம் பேசுகையில் தனிச்சிங்கள சட்டத்தை தமிழ்ப்பேசும் மக்கள் எதிர்த்தும் பெரும்பான்மையினரின் பலத்தினல் மசோதா நிறைவேற்றப்பட்டு விட்டதென்றும் இச்செயல் மனித அடிப்படை உரிமைச் சாசனத்துக்கே மாறுனது என்றும் கூறினர்.

தனிச்சிங்கள சட்டம் இன்று அமுலாதிகிட்டது. ஆனல் இதை தமிழ்ப்பேசும் இனம் இறுதிவரை எதிர்த்தேதீரும். இந்த மசோதா கொண்டுவரப்பட்டபொழுது தமிழ் மக்கள் எல்லோரும ஏகோபித்த எதிர்ப்பைக் காட்டினர். பார்லிமெண்டில் இம்மசோதா தாக்கல், செய்யப்பட்ட பொழுதிலும் தமிழ் எம். பி.க்கள் அனைவரும் எதிர்த்து வாக்களித்தனர். இருந்தபொழுதிலும் இம்மசோதா தமிழ் மக்களின் விருப்பத்தைப் பெருது நிறைவேற்றப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினர்.

ஜனநாயக நாடான இந்த நாட்டில் மக்களின் விருப்பம் பெருது ஒரு மசோதா நிறைவேற்றப்படுவது அநீதியான செயலாகும், இந்தச் செயலை இறுதிவரை நாம் எதிர்த்தே போராடுவோம். இந்தச் சட்டத்தை புரட்சி மூலம் நாம் எதிர்த்தாலும் அது சட்டவிரோதமாகாது என்றும் திரு. இராசமாணிக்கம் சொன்னர்.

(3-ம் கலம் பார்க்க)

இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) ரீகல (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) நவா (கொம்பனித்தெரு)

கல்யாணி (காவலப்பிட்டியா) ஸ்ரீகிருஷ்ணு (திருமலை) மொடேர்ன் (பதுளை) விஜிதா (ஹட்டன்)

விஜயா (மட்டக்களப்பு) ஜெமினி (குருகலை)

வியப்பு, திகைப்பு, விறுவிறுப்பு, வெள்ளமெனத் துள்ளிவரும் இசையமைப்பு!
உங்களை மகிழ்விக்கும் அற்புதப் படைப்பு!
உணர்ச்சிக் கோர்வையிலே உருவான
உன்னத குடும்பச் சித்திரம்!!



எம். ஜி. ராமச்சந்திரன் - பி. சரோஜா தேவி
எஸ். வி. சுப்பையா - எம். என். நம்பியார்
எம். வி. ராஜம்மா - நாகேஷ் - அசோகன்
மற்றும் பலர் திறம்பட நடித்த
சரவணா பிலிம்ஸ்

பணத் தோட்டம்

இசையமைப்பு: விஸ்வநாததன்-ராமமூர்த்தி
தயாரிப்பு: ஜி. என். வேலுமணி
டைரக்ஷன் கே. சங்கர்

மனோகரா (யாழ்ப்பாணம்)
சிவாஜி கணேசன் — பத்மினி நடித்த
எதிர்பாராதது

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஜனவரி மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது